SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram :
"GUARDIAN" JAFFNA.

Telephone : No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 24-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஆனி மாசம் 23-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## குழந்தை வளர்ப்பு விஷயத்தில் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்

பெற்றோராகிய நமக்கு எப்படிப் பயம், கோபம், கவலை, துக்கம், அதிருப்தி, இன்பம், அன்பு, பொறுமை, பகை ஆகிய உணர்ச்சிகள் இருக்கின்றனவோ அப்படியே குழந்தைகளுக்கும் இருக்கின்றன. இந்த உணர்ச்சிகள் நமது மனவாழ்வைப் பாவிக்கிற மாதிரியே அவர்களுடைய வாழ்வையும் விருத்தியையும் பாதிக்கின்றன. பிறக்கும்பொழுது, குழந்தை உதவியற்றதாயும் பிறரை நம்பிப் பிழைப்பதாயும் இருக்கிறது. ஆகையால் அதற்குப் பிற்காலத்தில் உண்டாகிற கெட்ட குணமெல்லாம் பொதுவாக அதைச் சரியானபடி வளராததினுலேயே உண்டாவன என்று திட்டமாகக் கூறலாம். குழந்தையைப் பார்த்து, இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று சொல்லுவதில் பிரயோசனமில்லை; அதினுடைய சக்திகளைச் சரியான துறைகளில் செலுத்துவிக்க வேண்டும்.

குழந்தை தாயினுடைய மடியில் இருக்கும்வரை சந்தோஷமாக இருக்கிறுன். அவனைத் தொட்டிலில் அல்லது கட்டிலில் கிடத்தினுல் முரண்டுபிடித்து அழுகிறுன்; அவனை மறுபடியும் மடியில் எடுத்து வைத்துக்கொண்டால், அவனுடைய அழுகை கப்சப்பென நின்றுவிடுகிறது. பிள்ளை அழுகிறதே என்று சொல்லி, கிடத்தின பிள்ளையை எடுப்பது தாய்க்கும் கெடுதல், பிள்ளைக்கும் கெடுதல். பிள்ளைக்குப் படிப்படியாகச் சுதந்திர புத்தி உண்டாவதை அது தடுத்துவிடுகிறது. சரியானபடி போஷித்துச் சரியானபடி உடுத்திய பிறகு, பிள்ளை இருக்கவேண்டிய இடம் தொட்டில் அல்லது கட்டில்தான்; தாயினுடைய மடி அல்லது இடுப்பு அல்ல; பிள்ளை அழுதால் அதற்காக எடுக்கக் கூடாது. அது சீக்கிரம் படித்துக்கொள்ளும், அழாமலிருக்க. பிள்ளையைத் தொட்டிலிலிட்டு ஆட்டித் தூங்கவைப்பது மிகவும் மோசமான பழக்கம். ஆட்டுவது நின்றவுடனே குழந்தை மறுபடியும் அழ ஆரம்பிக்கிறது.

விரல் சப்புதலும் ஒரு மோசமான பழக்கம். தாய்ப்பாலைக் குடித்து அனுபவித்த பிள்ளை அது கிடைக்காத வேளைகளில் தன் கைவிரலைச் சப்பிக்கொண்டிருக்கப் பழகிவிடுகிறது. இந்தப்பழக்கம் ஆரம்பத்திலே அவ்வளவு கெடுதலாகத் தோன்றுவிட்டாலும், பிறகு அதைமுறிப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அடிக்கடி விரலை வாயிலிருந்து எடுக்கவும் பிள்ளையை அதட்டவும்கண்டிக்கவும்வேண்டியிருக்கிறது. ஆகையால் சிறு வயதிலிருந்தே இந்தப் பழக்கம் ஏற்படாதபடி கவனித்துக் கொள்ளவேண்டும்.

குழந்தையினுடைய சீவியத்தில் மிகவும் கஷ்டமான காலம் பால்மறக்கிறகாலம். அடிக்கடி முரண்டுபிடிக்கும், அழும். தாய் அப்பொழுது பொறுமையைக் கையாடவேண்டும். குழந்தைகளுக்கு ஆகாரம்கொடுப்பது கஷ்டமான காரியம். அதிலுள்ள கஷ்டம் தாய்மாருக்குத்தான் தெரியும். குழந்தை ஆகாரத்தை வேண்டாமென்று சொல்லிவிடலாம், துப்பிவிடலாம், சிலசமயங்களில் வாந்திகூடப்பண்ணிவிடலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தாய் வீண் ஆர்ப்பாட்டம் ஒன்றும் இல்லாமல், சமயோசித புத்தியுடன், ஆனல் உறுதியாக நடந்துகொள்ள வேண்டும். பிள்ளையினுடைய இஷ்டத்திற்கு விட்டுவிடக் கூடாது. பிள்ளையை இடுப்பிலும் சாப்பாட்டை ஒருகையிலும் வைத்துக்கொண்டு முன்னும் பின்னும் நடப்பதும் பராக்குக் காட்டி ஊட்டம் அளிப்பதும் நல்லதல்ல.

பிள்ளைகளுக்குப் புதுப்பொருள்கள், புதுமிருகங்கள் புது ஆட்களைக்கண்டால் பயம். இந்தப் பயம் அவர்களுக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. இதைப்போக்கப் பெற்றோர்வழி செய்யவேண்டும். அதற்குச் சிறந்தவழி அவர்கள் பயப்படும் பல பொருள்களையும் பிராணிகளையும் அவர்களுக்குத் திரும்பத் திரும்பக் காட்டுவதேயாகும். பார்த்துப் பழக்கம் ஆக ஆக, பயம்போய்விடும். சிலபெற்றோர் "கள்ளன் வருகிறுன்," "பூச்சாண்டி வருகிறுன்," "உன்னைப் போட்டுவிட்டு நான் எங்கேயாவது போய்விடுகிறேன்" என்றெல்லாம்சொல்லிப் பிள்ளைகளுக்குப் பயங்காட்டுகிறுர்கள். இதைவிட முட்டாள்தனமான காரியமில்லை. பிள்ளை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## யேசுவின் திருஇருதய நேசம்

இருதயமானது சிநேகத்தின் அடையாளம்; அன்பின் அறிகுறி. பாசபட்சமுள்ளவனை நல்ல இருதயமுள்ளவன் என்கிறோம்; பகை வெறுப்புள்ளவனை கெட்ட இருதயமுள்ளவன், கல்நெஞ்சன் என்கிறோம். நமது இரட்சகராகிய யேசுக்கிறீஸ்துநாதசுவாமி சர்வேசுரனுகியமட்டும் சரீரமில்லாதவர்; சரீரம் இல்லாத அசரீரிக்கு இருதயமில்லை. மனுஷனுகியமட்டும் அவர் நம்மைப்போல சரீரமுள்ளவர்; சரீரமுள்ளவராகையால் மனுஷ சுபாவத்தில் அவருக்கு ஓர் இருதயமுண்டு. பெத்லெகேம் குகையில் பிறந்த தேவ பாலனுக்கு இருந்த இருதயமும் கல்வாரிமலையில் இறந்த இரட்சகருக்குள்ள இருதயமும் ஒன்றுதான். இந்த இருதயம் சிநேகம் நிறைந்த இருதயம், அணைகடந்த அன்புள்ள உத்தம இருதயம். திவ்வியயேசு தேவசுபாவமும் மனுஷசுபாவமுமுள்ள ஒரே தேவஆளானபடியால் அவரது மனுஷீகத்துக்குள்ள இருதயம் தேவஇருதயம் என்னப்படும். ஆதலால் ஆராதனைக்குரிய இருதயம்.

தேவசிநேகமும் பிறர்சிநேகமும் சம்பூரணமாயுள்ள இருதயமே அதிஉத்தம இருதயம். நமது தேவஇரட்சகரிடம் இவ்விரு சிநேகமும் மகா பிரகாசத்தோடு விளங்குகிறது. அவர் தமது பரமபிதாவை அத்தியந்த விதமாய்ச் சிநேகித்தாரென்பதற்குச்சுவிசேஷத்தில் அநேக அத்தாட்சிகளுண்டு. பரலோக பிதாவின் சித்தப்படி நடப்பது அவரது ஏக அலுவல். அவரது சீவியகாலத்தில் அவர் இயற்றிய ஒவ்வொரு கருமத்துக்கும் துவக்கமும் முடிவும், அளவும்ஒழுங்கும், கதியும்கருத்துமாயிருந்தது தெய்வீக பிதாவின் திருச்சித்தமே. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே தமது ஆறுதலும் உணவும் ஆனந்தமும் என்கிறுர். தம்மைப்பெற்ற மாதாவும் வளர்த்த கைத்தாதையும் தேவபிதாவின் பிரதிநிதிகளாயிருப்பதால் அவர்களுக்கு முப்பது வருஷம் கீழ்ப்படிந்து நடக்கிறுர். பூங்காவனத்தில் காணப்பட்டபாத்திரம் தமது பிதாவினுல் அனுப்பப்பட்டபாத்திரம்; அதிலடங்கியதுஎவ்வளவு கசப்பான பானமாயிருந்தாலும், "என்பிதாவினுல் அனுப்பப்பட்ட பானத்தை நான் பருகாமலிருப்பேனே?" "என் மனதின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகட்டும்" என்கிறுர். அவரது கடைசி வார்த்தைகளும் பரமபிதாவின் மட்டில் அவருக்குள்ள அதிமிக நேசத்தையே வெளிப்படுத்துகிறது: "பிதாவே உமதுகரத்தில் என் ஆத்துமத்தைக் கையளிக்கிறேன்"

தேவதிருச்சுதன் இவ்வுலகில் சீவித்த 33 வருஷமளவும் தமது சொந்த மகிமையைத் தேடாமல் பிதாவின் மகிமையையே தேடுகிறுர். தாம் பிதாவினுல் அனுப்பப்பட்டதாகப் பிரஸ்தாபிக்கிறுர். தாம் போதிக்கும் போதகம் பரலோக பிதாவின்போதகம். தாம்செய்யும் புதுமைகள் பிதாவின் அலுவல்கள். சகல நன்மைகளையும் பிதாவிடமிருந்து மன்றுடி அடைவதாகத் தெரிவிக்கிறுர். மானிடர் பிதாவிடம் செல்லும் வழி தாமே; மற்றவர்களைப்போலவே தாமும் தம் பிதாவிடம் கடைசியாகச் செல்லவேண்டும். உவமைகளில் அவர் சொல்லியருளிய வீட்டு எசமான், பிரசைகளின் இராசா, ஊதாரிப்பிள்ளையின் தந்தை, காணுமற்போன ஆட்டைத் தேடிச்சென்ற ஆயன், திராட்சத்தோட்டத்தின் முதலாளி—எல்லாம் தேவபிதாவே. தமது சீவியத்தின் கதி பிதாவின் மகிமை. சகல வேலைகளையும் அற்புதங்களையும் பரலோகபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கக் கண்ணும் கருத்துமாயிருக்கிறுர். இவ்வாறு தேவசிநேகம் திவ்விய இரட்சகரிடம் ஒளிவிட்டுப் பிரகாசித்ததென்பதற்கு சுவிசேஷமே சந்தேகமற்ற சாட்சி.

தேவசிநேகமும் பிறர்சிநேகமும் இணைபிரியாத இருசகோதரிகள் என்று சாஸ்திரிகள் உபமானமாகக் கூறுவதுண்டு; ஒன்றுய் இணைந்து வளரும் இரண்டு கனிகளைப்போன்றவை என்பாருமுளர். எங்கே தேவசிநேகமிருக்கிறதோ அங்கே பிறர்சிநேகமும் இருக்கும். சர்வேசுரனைச் சிநேகிக்கும் இருதயம் பிறரையும் அவருக்காக, அவர் நிமித்தம் சிநேகிக்கும். தமது பிதாவை அத்தியந்தவிதமாய் நேசித்த நமது ஆண்டவர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித சவேரியார் விழா

சென்ற வைகாசிமாசம் 29-ந்திகதி நாகாசக்கியிலிருந்துபுறப்பட்ட பல்வேறு நாட்டவர்களான திருயாத்திரிகளும், பல ஆயிரக்கணக்கான ஜப்பானிய கிறீஸ்தவர்களும் ஆனிமாசம் 13-ந்திகதி ஜப்பானின் தலைநகராகிய ரோக்கியோவை அடைந்ததும் நூற்றூண்டுவிழா தொடங்கியது. சுமார் 30,000 விசுவாசிகள் இவ்விழாவில் கலந்துகொண்டனர். இவ்விழாவிற்குப் பாப்பரசரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட சிட்னி (ஆஸ்திறேலியா) அதிமேற்றிராணியாரான கருதினல் நார்மன் ஜில்ருவா ஆண்டவரவர்களின் தலைமையில் கொண்டாட்டங்கள் ஆரம்பித்தன. புனித சவேரியாரின் வலதுகரத்தைக் கொண்டுவந்த ஸ்[illegible]னிய திருயாத்திரிகர், சவேரியார் தமது வாழ்நாள் முழுவதும் செபத்தியானத்திற்கு உபயோகித்துவந்த சிலுவையையும் கொண்டுவந்துள்ளனர்.

## கருதினலின் மரணம்

பரீஸ்நகர் அதிமேற்றிராணியாராகிய கருதினல் சுஹார் ஆண்டவரவர்கள் வைகாசிமாசம 30-ந்திகதியன்றுமரணமடைந்தார். இவர்செய்த கடைசி முக்கியமான காரியமென்னவெனில், புனித வருடத்திற்கு ஆயத்தமாக இந்த 1949-ம் வருடத்தை மரியாயின்வருடமாகக் கொண்டாடவேண்டுமென்றும், செபமாலையைப் பயபக்தியுடன்சொல்லிவரவேண்டுமென்றும்கேட்டுப் பிரான்சுதேசக் கிறீஸ்தவர்களுக்கு ஓர் நிருபம் விடுத்தார். இவர் 1874-ம் ஆண்டு பிறந்து 1898-ல் குருப்பட்டம்பெற்று 1928-ல் பய்யோநகர் மேற்றிராணியாராகவும், பின்னர் ரீம்ஸ்நகர் அதிமேற்றிராணியாராகவும், கடைசியாகப் பரீஸ்மாநகர் அதிமேற்றிராணியாராகவும் நியமிக்கப்பெற்ருர். பின் 1935-ல் கருதினல்பதவிக்கு உயர்த்தப்பெற்ருர். இவர் மிகுந்த கல்வியறிவும், கூர்மையான புத்தியும், நிர்வாகத்திறனும் உடையவராக விளங்கினுர்.

## உகண்டாதேசக் கத்தோலிக்கர்

ஆபிரிக்காவிலுள்ள உகண்டாதேசத்தில் கத்தோலிக்க சமயமானது அதிசயிக்கத்தக்க விதமாய் விருத்தியாகி வருகின்றது. இற்றைக்கு 50 வருடங்களின்முன் அத்தேசத்தில் மிகக் குறைந்த தொகையினரே கத்தோலிக்கராயிருந்தனர். அந்நாளில் 22 சுதேசிகள் வேதசாட்சிகளாகக் கொலைசெய்யப்பட்டனர். 'வேதசாட்சியின் இரத்தம் வேதத்தின்வித்து' என்பது அத்தேசத்தில் உண்மையாக்கப்பட்டுள்ளது. தற்போது அத்தேச முழுக்குடிசனத்தின் மூன்றிலொருபங்கு பேர் கத்தோலிக்கராயிருக்கின்றனர். இவர்களின் தொகை 10,00,000 ஆகும்.

## பாகிஸ்தானின் கோரிக்கை

முஸ்லீம் இராச்சியமாகிய பாகிஸ்தானிலே 7 கோடியே 70 லட்சம் சனங்களிருக்கின்றனர். இத்தனை சனங்களுக்கும்சேவைசெய்யத் தற்போது 200 சுகாதாரத்தாதிகளே இருக்கின்றனர். இன்னும் அநேக சுகாதாரத்தாதிகளைப் பயிற்சிசெய்வதற்காக, அரசாங்கம் கத்தோலிக்க வைத்திய மிஷனரிய கன்னிகாஸ்திரீகள் சபையின் உதவியைக் கோரியிருக்கிறது. இச்சபைக் கன்னியரைக்கொண்டு, காலதாமதம் செய்யாது தீவிரமாக அநேக தாதிகளைப் பயிற்றுவிக்கச் சகல ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்யும்படி பாகிஸ்தான் இராணுவம் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டிருக்கின்றது. வைத்திய மிஷனரிய கன்னியர் சபையானது பூரணவைத்தியப் பயிற்சிபெற்ற கன்னியர்களையே அநேகமாகக் கொண்டுள்ளது.

## பாப்பரசரின் ஸ்தானபதி கைதுசெய்யப்பட்டார்

எஸ்தோனியதேச பாப்பரசரின் ஸ்தானபதியாயிருக்கும் வண. ஹென்றி பேர்லிங் என்னும் குருவானவர் எதிர்பாராதவிதமாக, சோவியற் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டிருக்கின்ருர். அவர் எதற்காகக் கைதுசெய்யப்பட்டாரென்பதும், அவர் தற்போது எங்கே வைக்கப்பட்டிருக்கிருரென்பதும் இன்னும் மர்மமாகவே இருந்துவருகின்றது. சோவியற்ருஷியாவின் ஐக்கிய இணைப்பில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்ட பால்த்திக் பிரதேசநாடுகளுள் எஸ்தோனியாவுமொன்று.

## சுவிசேஷபுத்தக அதிகவிற்பனை

அமெரிக்க நாட்டிலே, எல்லா நூல்களையும்விட, சுவிசேஷப் புத்தகமே அதிகம் அதிகமாக விலைப்பட்டு வருகிறதென்று அமெரிக்க வர்த்தகப் பகுதியினர் தமதுஅறிக்கையில் வெளிப்படுத்தியிருக்கின்றனர். 1948-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட விற்பனைப்பொருள் புள்ளிவிபரங்களின்படி, அவ்வாண்டில் 9 கோடியே 24 லட்சத்து 80 ஆயிரம் சுவிசேஷப் புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன.

## காப்பிரிமக்கள் சர்வகலாசாலை

ஆபிரிக்க பெல்சிய கொங்கோதேசப் போரான 'லூவேயின்' சர்வகலாசாலையானது அங்குள்ள நீக்ரோ சாதியினருக்காகச் சமீபத்தில் ஒரு கிளைச்சர்வகலாசாலையை ஸ்தாபித்திருக்கிறது. இப்புதிய ஸ்தாபனம் அரசினர் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது. இச்சர்வகலாசாலை அத்தேசத்தில் திருத்தொண்டாற்றும் யேசுசபைக் குருக்களால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

## "அயர்மக்கள் செய்த காரியங்களுள் அதிசிறந்தது வேதத்தைப் பரவச்செய்ததே"

அயர்லாந்துதேசம் சுதந்தா குடியரசானதின ஞாபகமாகச் சமீபத்தில் வத்திக்கானில் அயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் நடைபெற்ற கொண்டாட்டத்திற்கு, அயர்தேசப் பிரதம மந்திரியாராகிய திரு. காஸ்டெல்லோ என்பவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் "அயர்லாந்துதேசம் சாதித்துள்ள காரியங்களுள் அதிக பெருமைவாய்ந்தது எதுவெனில், அயர்மக்கள் கிறீஸ்துவின் பரிசுத்த வேதத்தைப் பரவச்செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகளேயாம்" என்று குறிப்பிட்டார்.

## செபத்தின் வல்லமை

ஆத்துமாக்களை மனந்திருப்புவதற்குச் செபமானது மகாவல்லமையுள்ள சாதனமென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். கீழ்த்தேசத்துப் பிரிவினைச் சபையார் மனந்திரும்ப, சிலநாட்களுக்குமுன் செபஅப்போஸ்தல சபையார் ஒப்புக்கொடுத்த செபங்களின் பலனாக இப்போது பல ஆயிரக்கணக்கான ருஷிய பிரிவினைச்சபையார் மனந்திரும்பிச் சத்தியதிருச்சபையிலுட்பட்டிருக்கின்றனர்.

## நிரந்தர செபமாலை

கனடாதேச ஒற்ருவா நகரில் சென்ற வைகாசி மாதம் முழுதும் இராப்பகலாய்த் தினம் 24 மணிநேரமும் ஓயாமல் ஒழியாமல் தேவதாய்க்குத் தோத்திரமாகச் செபமாலை செபிக்க ஏற்பாடு செய்து ஒவ்வொரு மீசாமிலுமுள்ள குடும்பங்களெல்லாம் தத்தமக்குக் குறிக்கப்பட்ட நேரத்தில் பத்திஉருக்கத்துடன் செபமாலை செபித்து ஒப்புக்கொடுத்தார்கள். 'பத்திமாபதியின் நிரந்தர செபமாலை' என்னும் இப்பத்தி முயற்சியை, வைகாசிமாதத்தில் மாத்திரமல்லாமல் வருடம் 365 நாளும் இடைவிடாமல் செய்விப்பதற்கு உலக முழுவதிலும் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றது.

## அமெரிக்க கத். பாடசாலைகள்

அமெரிக்க ஐக்கியநாட்டிலே பெரிய கலாசாலைகள், உயர்தரபபாடசாலைகள், ஆரம்பப்பாடசாலைகள் முதலியன ஆயிரக்கணக்கான கல்விஸ்தாபனங்களை ஏற்படுத்தி லட்சக்கணக்கான மாணவர்களுக்குக் கல்விபுகட்டும் அரிய தொண்டு திருச்சபையின் கண்காணிப்பில் நடைபெற்று வருவதால, அமெரிக்க அரசினருக்கு 150 கோடி டலர் லாபம் ஏற்பட்டிருக்கிறதாக அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகின்றது. இந்தக் கத்தோலிக்க பாடசாலைகளை அரசினர் எடுத்து நடத்துவார்களேயாளுல், பொதுமக்களிடம் இப்பெருந்தொகைப் பணத்தை வசூலிக்கப் புதிய வரிகளை ஏற்படுத்த நேரிடுமாம்.

# பொதுவர்த்தமானம்

## தேனீக்களின் படையெடுப்பு

கலேஎன்ற பிராஞ்சிய நகரிலிருந்து சில வாரங்களுக்குமுன்பு ஒருமிகப்பரபரப்பான செய்திவந்தது. 3 லட்சம் தேனீக்கள் அந்நகர்மீது படையெடுத்துவிட்டன. கலேநகரின் குடிசனம் 50,000 பேர். அதனுல் அவர்களில் ஒருவனுக்கு ஆறு பகைவர்கள்! அந்நகரம் முழுவதும் பல நிமிடநேரம் அமளி துமளிப்பட்டது. ஐந்து கூடுகளில் அமர்ந்து ஒரு லொறியில் அந்த 3 லட்சம் தேனீக்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்தன. ஒரு தெருவின் மூலையால்திரும்பும்போது, லொறி சற்றுக்குலுங்கியதால் ஈக்கள் யாவும் ஒன்றுசேர்ந்து வெளியேபறந்துபோய் விட்டன. லொறிச்சாரதி கைதேர்ந்த பேர்வழி. அவன் தேன்கூடுகளை எல்லாம் எடுத்துத் தெருவில் வரிசையாய் வைத்தான். கூட்டங்கூட்டமாக மேலே பறந்துகொண்டிருந்த தேனீக்கள்மீது தண்ணீரை அள்ளிஅள்ளிவீசினுன். சலம்பட்டதும் தேனீக்களின் பித்தம் தெளிந்துவிட்டது. அதனுல் எல்லா ஈக்களும் தங்கள் கூடுகளுக்குத் திரும்பிவிட்டன. சகலவிஷமிகளும் திரும்பிவந்து விட்டனவாவென்பதை அந்தச்சாரதி நிச்சயப்படுத்திக்கொண்டு லொறியைச் செலுத்தஆரம்பித்தான். அந்நகர்வாசிகளெல்லோரும் 'அப்படா' என்று பெருமூச்செறிந்தார்கள்.

## தேவதைகள்படும் உபத்திரம்

ஆபிரிக்கநிகிரோக்கள் தங்களுக்கு ஏற்படும் நன்மைகள் நல்லதேவதைகளாலும், தீமைகள் துஷ்டதேவதைகளாலும் ஏற்படுகின்றனவென நம்புகின்றனர். சகலதேவதைகளையும் விக்கிரகங்களையும் செய்துவைத்து வழிபடுகின்றனர். அவர்களுடைய தெய்வத்துக்கு "பெடிஷ்" என்றுபெயர். தங்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்படவேண்டுமென்ருல் உடனே அந்தவிக்கிரகங்களைப் பிரார்த்திக்கிருர்கள். உதாரணமாக, மழைபெய்யவேண்டுமென்று அவர்கள் விரும்பினுல் அத்தேவதைகளை பத்திசிரத்தையோடு வணங்குகிருர்கள். அப்படிவேண்டிக் கொண்டும் மழைபெய்யாது விட்டால் அந்த உருவங்களை அடி அடியென்று வெளுத்துவாங்கிவிடுகிருர்கள். இன்னும் தாங்கள் செய்யும் காரியங்கள் அத்தேவதைகளுக்குத் தெரியக்கூடாதென்று நினைத்தால், உடனே அவைகளின் கண்களை மறைப்பதற்காக அவ்விக்கிரகங்களின்மீது ஓர் துணியைச் சுற்றிவிடுகிருர்களாம். என்னே இவர்களின் மூடப்பத்தி.

## காப்பியின் வேறுஉபயோகம்

காப்பிஎன்ருல் உடனே அதைக் குடிக்கலாம் என்றுதான் தோன்றும். ஆனுல் அமெரிக்காவில் உள்ள ஜெருபேட் பிறவுண் என்பவர் காப்பியை ஒரு பானமாக நினைப்பதேயில்லை. அவர் காப்பியிலிருந்து எத்தனையோபொருட்களைத் தயாரிக்கிருர். சவர்க்காரம், தைலம், பவுடர், தலைவலி மாத்திரை, சப்பாத்து மினுக்கி முதலியவை அவற்றுள் சில. அவர் தொன் கணக்கில்தான் காப்பிக்கொட்டைகளை வாங்கி வருகிருர்.



மாதகல் வாசரும்,
சிங்கப்பூரில்
ரிம்பர்இன்ஸ்பெக்ரராயிருப்பவருமாகிய
ஸ்ரீமான் ஏ. பீ. பொன்னுத்துரை
அவர்களின்
அன்பார்ந்த பாரியாரான
ஸ்ரீமதி மேரிப்பிள்ளை பொன்னு
அவர்களின்

### — 3-ம் வருட —

## மரண ஞாபகம்

### இறந்ததினம் — 25-6-46

### பத்தாவின் பிரலாபம்
விருத்தம்

திங்கள்முக ரஞ்சிதமே அன்பின்மிக்க
தெவிட்டாத மதுரமொழி செப்பும்
தேனே
மங்களமார் மனைவிளக்கே மக்கள்ஓங்க
மாட்சியுடன் காட்சிபெற வளர்த்தே
வந்தீர்
தங்கமணிச் செபமாலைப் பத்திதன்னில்
சந்ததமு மோங்கினையே எம்மை
விட்டே
பொங்குபர லோகமுற்ருய் எமது
சோகம்
போக்கிடவே தயைவேண்டல் புரிகு
வீரே

### பிள்ளைகளின் பிரலாபம்
விருத்தம்

சொல்லரியதவம்புரிந்து எமையேபெற்றே
சுவர்ணமயத் தொட்டிலிட்டீர்
சுகமேநீட
நல்லமிர்த போசனங்கள் பட்டாராடை
நவமணியார் பொற்பணிகள் பலவு
மீந்து
எல்லவரும் மதித்தெமையே போற்று
மாறு
இணையிலாக் கல்வியமு தூட்டு
வித்தே
வல்லபரன் பதமடைந்தீர் தந்தையோடு
வருந்துமெமக் காய்நிதமன் ருடுவீரே

சிங்கப்பூர், 24-6-49.

## அலுமினியகட்டிடம்

அலுமினியத்தால் கட்டப்படும் கட்டடங்களைக்கொண்ட பள்ளிக்கூடங்கள் தற்போது பிரித்தானியநாடுகள் முழுவதும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவைகளில் முதல்மூன்று பிறிஸ்ரல்நகரில் தற்போது திறக்கப்பட்டுள்ளன. பிறிஸ்ரல் விமானம் தயாரிக்கும் பிறிஸ்ரல் ஏரேப்பிளேன் கம்பெனியார்தான் இவைகளை நிர்மாணித்து வருகின்றனர். மேலும் 192 பள்ளிக்கூடங்களை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### நூதன கமரு

ஜப்பானியர் ஒருவர் ஒரு நூதன கமருவைத் தயாரித்திருக்கிருர். இது 1 அங்குல நீளமும் 1 அங்குல அகலமும் $2\frac{1}{2}$ அங்குல உயரமுமுள்ள ஒரு பொம்மைக் கமருவாம். இதைவிரல்களில் பிடித்துக்கொண்டு கண்ணேடு சேர்த்துப் பிடிப்பதற்குக்கூட வெகுசிரமமாக இருக்கும். அப்படி இருந்தும் அது படம் பிடிக்கிறது. ஜப்பானிய வியாபாரநிலையத்தில் விற்பனைக்கு வந்திருக்கிறது. இதன் விலை ரூபா 100. இதற்கு 'ஸ்ரெக்கி'கமருஎன்று பெயர்.

—ஷாங்காய்நகரில் குற்றங்களை ஒழிக்கத்தீவிர நடவடிக்கைகள் எடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. பையிலிருந்து யாதும் திருடும்போது ஒருவன் பிடிபட்டால் அவனுடைய விரல்கள் துண்டிக்கப்படும் என்று அவ்வுத்தரவு கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நகர் துணை ஆயர் மகுடாபிஷேக முதல்மாத நிறைவு நினைவு

— எங்கள் குருநாதன் —

விருத்தம்

1

பொன்னனைய தமிழோங்க மன்னுயாழ் நாட்டிலே
பொன்விளை கரம் பொன்னிலே
புனிதமுறு வேளாளர் குலதிலகர் செய்தவப்
பேருக வந்துதித் தோன்
பன்னரும் பல்கலைப் பட்டங்கள் பெற்ற குரு
பாரெலாம் புகழு பீற்றர்ப்
பிள்ளையாந் தம்பியும் பின்பற்று மாறரிய
பேரின்ப வாழ்வு தேடி;
மன்னர்க்கு மன்னவன் மாபெருங் கருணையால்
மனிதனய் வந்த புனிதன்
மன்பதைகள் உய்யவே அன்புதரு நெறிகாட்டி
மரித்து ரட்சித்த தியாக
இன்பவடி வானதவ யேசுமல ரடிபோற்றி
இணையற்ற துறவு பெற்ற
யுவராசனே! எங்கள் தவராசனே! வாழ்க!
எமிலி யாங் குருநாதனே!

2

ஈடரிய இனிய தமிழ்த் தாயீன்ற ஏந்தலே!
ஏத்து முதற் தமிழாயனே!
ஏட்டிற் கடங்குமோ உனது திரு அபிஷேக
எழில் ஏழைசொல முடியுமோ?
நாடறியு மன்னரும் ஞானவிற் பன்னரும்
நாடிவந் தாசி தந்தார்
நாற்றிசைப் பெரியாரும் போற்றிநின் ரூர்தவம்
ஞாலத்திலும் பெரியதே
வீடருளு பேரின்ப தவ வாழ்வின் மாணவரு
மேலான புகழு முண்டோ
விஞ்ஞான வன்மை பெறு மெய்யான பண்டிதா!
ஏடவிழும் இன்பகுரு யேசுமல ரடிபோற்றி
இணையற்ற துறவு பெற்ற
யுவராசனே! எங்கள் தவராசனே! வாழ்க!
எமிலி யாங் குருநாதனே!

3

காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கனைகடற் புவி மீதிலே
கன வென்ற வாழ்விலே தாழ்விலே கரையிலாக்
கடியதுயர் படுமு னடியார்
போற்றவரு தெப்பமே! ஏற்ற வரு கப்பலே!
பரிசுத்த பக்தி யரசர்
போர்வென்று வாவென்று போதித் தனுப்பவரு
புண்யசே னதி பதியே!
ஆற்றுசெய லன்பினல் ஆகாய வழிசென்று
மயர் வின்றி யிரவு பகலாய்
அன்பர்பய மகல இன்பவுரு வாய்நின்ற
ஆயர்குல கோ பாலனே!
ஏற்றரிய இன்பகுரு யேசுமல ரடிபோற்றி
இணையற்ற துறவு பெற்ற
யுவராசனே! யெங்கள் தவராசனே! வாழ்க!
எமிலி யாங் குரு நாதனே.

4

ஆளுந்தி றத்திலே நீளுங்கு ணத்திலே
அரிய செயல் பிரிய வசனம்
அருளின் கனத்திலே அரச ஞானத்திலே
அஞ்ஞான இருள் பரப்பும்
பாழான பொதுவுடைமை யாதிபகை வீயவரு
பானுவே ஞான நிறைவே!
பரமனரு ளாலெங்கள் பெரியகுரு வாய்வந்த
பரிவான தந்தை நீயே!
மீளாத, அறியாமை சூழ்மாய சதியுலக
வாதனையில் தீய வினையில்
மாளாது நாம் வாழ வரமருவு சக்தியுனை
வாழ்த்தி னேம் நீடு வாழ்க!
ஆளவரு மின்பகுரு யேசுமல ரடிபோற்றி
இணையற்ற துறவு பெற்ற
யுவராசனே! எங்கள் தவராசனே! வாழ்க!
எமிலி யாங் குரு நாதனே.

நெடுந்தீவூர். — எம். யோஸ்.

## யாழ்ப்பாண துணைமேற்றிராணியாருக்கு கொழும்பில் குதூகல வரவேற்பு

## ஆசீர்வாதப்பர் கல்லூரியின் அகமகிழ்வு

சென்ற 13-ந்திகதி என்றும்போல் அன்றும் சூரியன் உதித்தான். ஆனால் நடைபெற்ற நிகழ்ச்சிகளெல்லாம் புதுமையானவையாய்த்தோன்றின. அர்ச். ஆசீர்வாதப்பர் கல்லூரியானது அன்று புதுமலர்ச்சியுடன் பொலிவுபெற்றிருந்ததை எவரும் கவனித்திருப்பர். அன்று அகில இலங்கையிலும் புகழ் வீசி, யாழ்ப்பாணத்துணை ஆயர் பதவியேற்றுள்ள மகாவந்திக்கத்தக்க ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள், தாம கலைபயின்ற இக்கல்லூரிக்குத் தரிசனையளிக்கப் போகிறார்என்ற மகிழ்வுச்செய்திதான் இத்துணை புதுமலர்ச்சிக்குக் காரணமாகும். எக்கல்லூரிக்கும், ஒருபோதும் கிடைத்திராத ஒரு பெருமை தனக்குக்கிடைத்துள்ளதையிட்டு அர்ச். ஆசீர்வாதப்பர் கல்லூரி எனுந்தாயானவள் அன்று மிக மிகஆனந்தமடைந்து காணப்பட்டாள்.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்"

எனுங்குறட்பாவிற் குறிப்பிடும் தாயாகி இலங்கிநின்றுள். ஆம். சிலகாலம் தன் உதரமாகிய வகுப்பறைகளில் வைத்திருந்து கல்வியாகிய உணவூட்டி வளர்த்த இத்தனையன் இன்று உலகெலாம், சான்றோன்-பெரியோன்-மேற்றிராணியார் எனப்போற்றப்பட்டுத் தன்இல்லத்தில் ஏற்றுக்கொள்ளும்போது இக்கல்லூரித்தாயானவள் எவ்வளவு உன்னதமான மகிழ்ச்சிகொள்ளுவாள் என்பதைக்கூறவும் முடியுமா? தன்பெருமைசான்ற தனையனை வரவேற்பதற்காக அக்கல்லூரியின் பழையபுதிய மாணவராய் ஈராயிரவர் கூடிநின்றனர். ஏலவே தம்மையும் கல்லூரியையும் பூரணாலங்காரம் செய்துகொண்டனர். குறித்தநேரத்தில் புதியமேற்றிராணியார் கல்லூரியை அடைந்தார். அக்கல்லூரிப்பெருவாசலில் வைத்து அவரது சகோதரரும்,முன் அக்கல்லூரியின் தனிப்பெரும் தலைவராயிருந்தவரும், தற்போதுகிறிஸ்தியன் விறதர்மார்சபையின் அதிதலைவராயிருப்பவருமாகிய சங். லூக்பிள்ளை விறதரும், கல்லூரியின் தற்போதைய நிர்வாகியாகிய அகஸ்ரின் விறதரும், புதியமேற்றிராணியாரை வரவேற்றனர். பின்பு சங். லூக்பிள்ளை விறதரும் உதவிநிர்வாகி சங். றோபேட் விறதரும் மேற்றிராணியாரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் அழைத்துச்சென்று ஆசிரியர்களையும் மாணவர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்கள். ஆசிரியர்களுடனும் மாணவருடனும் புதியஆயர் அன்பு, தாராளமாக அளவளாவினர்.

புதியஆயரின் கல்லூரித்தரிசனையைக் கண்ணியப்படுத்துவதற்காகச் சமுகமளித்திருந்த பழைய மாணவர்களும் மேற்றிராணியாரைச்சந்தித்துப் பெருமகிழ்வடைந்தனர். அக்காலையில்மேற்றிராணியார் கல்வியில் மாத்திரமன்றி விளையாட்டிலும் முதல்வராக இருந்து பிரசித்திபெற்றதும், அவரில் அப்போதும் விளங்கிய இனியபேச்சும் மலர்ந்தமுகமும், சரளசுபாவமும், தன்னடக்கமும், அவர் உடன்மாணவரை மிகக்கவர்ந்திருந்ததென்பது அன்று நன்கு வெளிப்பாகத் தென்பட்டது.

பின் மேற்றிராணியாருக்கு கல்லூரியின்பொதுவரவேற்பு நடத்தப்பட்டது. வரவேற்புமண்டபத்துள் இரண்டாயிரம்மாணவர் தம்ஆசிரியர்களுடனும் மற்றும் பிரமுகர்களுடனும் கூடியிருந்தனர். மேற்றிராணியார் மண்டபத்தையடைந்ததும் நாலாயிரத்துக்கு மேற்பட்ட கைகள்ஒருமித்துச் சப்தமிட்டு மகிழ்ச்சியைத் தெரிவித்தன. புதியமேற்றிராணியார் உயராசனத்தில் அமர்ந்தனர்.

கல்லூரித்தலைவர் விறதர்அவர்கள் மேற்றிராணியாருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார். அவர், அதில் ஆண்டவரவர்களது பாடசாலை வாழ்க்கையையும், விளையாட்டில் அவர்தம்மேன்மையையும் குறிப்பிட்டார். கல்லூரி அவர்தம்மால் அடைந்துள்ள பெருமையையும் அறிவுறுத்தினார். ஆசிரியர் திரு. ஈ. ரி. பெறேரு எழுந்து, யாழ்ப்பாண வயலின்கண் விளைந்தஅரிய ஒருமரத்தின் ஒருதீங்கனிஎன ஆண்டவரைக் குறிப்பிட்டார். பின்பு மேற்றிராணியார் அவர்கள் எழுந்து தமக்குச்செய்யப்பட்ட உபசாணைக்கு நன்றிதெரிவித்து: "வருங்காலம் பிரகாசமான விசுவாசத்தின் காலமாயிருக்கும்; மாணவர்களாகிய நீங்கள் பிறரை நேசியுங்கள். அதனல் சந்தோஷத்தை அடைவீர்கள். நேசிப்பதைச் செயலிலும் காட்டுங்கள்; பிறருக்காக வாழுங்கள்; உதவிசெய்யுங்கள்; இத்தகையபண்புள்ள உங்களால் இந்த ஆசீர்வாதப்பர்கல்லூரி மிகச்சிறப்படையும்" என்றுகூறி ஆசீர்வாதம் அருளினர். குதூகலமான வரவேற்பு முடிந்ததும் எல்லோரும் ஆண்டவருக்குப் பல்லாண்டுத்துதிகூறிச்சென்றனர்.

A. போனிப்பாஸ்

## மடு விடுதலை

மருதமடுச் செபமாலை மாதாவின் முடிசூட்டு வெள்ளியூபிலி விழாவை முன்னிட்டு ஆனிமாதம் 29-ந் திகதி தொடக்கம் ஆடிமாதம் 4-ந்திகதி வரையும் இம்மேற்றிராசனத்திலுள்ள எல்லாக் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைகளும் மூடப்படலாமென்று இத்தால் தெரிவிக்கிறோம். பாடசாலை நாட்கள் போதாதெனக்காணின் பாடசாலை நடத்தலாம்.

G. A. GURUSAMY, O. M. I.
Gen. Manager, R C. Schools.

Jaffna, 20-6-49.



ஊர்காவற்றுறை உதயதிசைவாசரும்
அர்ச். அந்தோனியார் கோவில்
கட்டளைகாரரில் ஒருவரும்
கொழும்பில் கப்பல் கப்பித்தான்
உத்தியோகமாய் இருந்தவருமான

### ஸ்ரீ ம. ப. சிங்கராயர் அவர்களின்

— 2-ம் வருட —

## மரண ஞாபகம்

**இறந்த தினம் — 30 - 6 - 47**

உன்னதத்தில் வீற்றிருக்கும் பிதாவே! உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமங்களுக்காத்க திவ்விய யேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். சுவாமி! பரிசுத்தரே, சர்வ வல்லப பரிசுத்தரே, அட்சயரான பரிசுத்தரே. சுவாமி! மரித்த ம. ப. சிங்கராயருடைய ஆத்துமத்தின்மேல் இரக்கமாயிரும். மரித்த சகல விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும்.

நேசபத்தாவையும் தந்தையையும்
இழந்து துன்புறும்
**மனைவி-மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 24-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடந்தேறும். இரண்டு சகோதரிகள் அப்போது நவ அப்பியாசகால அந்தஸ்துக்கு ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். ஆடிமாதம் பின்வரும் தேதிகளில் பரிபூரணபலன்களை அடையலாம் :—2, 8, 9, 11, 14, 21(2), 23, 26, 27. நிபந்தனைகள் :—பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை பெறல், ஆசனக்கோவிலைச் சந்தித்தல், அர்ச். பாப்பாணவருடைய கருத்துகளுக்காகமன்றாடல். ஆடிமாதம் 2-ந் தேதியன்று பொ[illegible]ப்பாவமன்னிப்பு இருக்கும்.

A. S. FRANCIS OF MARY
for Director.

## சத்தியவேத பாதுகாவலன்

1949-ம் ஆண்டு
ஆனி மாசம் 23-ந் திகதி



12-ம் பத்திநாதர் எனும் பாப்பரசர்
மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை,
O. M. I. ஆண்டவரை,
யாழ்ப்பாணத் துணை ஆயராய்
— ஏற்படுத்துகின்ற —

## நியமனச் சாசனம்

தேவதொண்டர்களதுதொண்டனுகும் பத்திநாதர் மேற்றிராணியாராகியநாம், யாழ்ப்பாணத்தின் தற்போதைய மேற்றிராணியாருக்குத் துணைமேற்றிராணியாராகவும்—தொடர்ந்து மேற்றிராணித்துவபதவிவகிக்க உரித்துள்ளவராகவும்—பிளாடியாநகர பட்ட மேற்றிராணியாராகவும் தெரிந்துகொள்ளப்பட்டவரும், அமலோற்பவ பரித்தியாகிகள் சபை அங்கத்தவரும், யேசுநாதரில் நமக்குப் பிரிய குமாரனுமாகிய, எமிலியானுஸ் ஜெரோம்பிள்ளை மேற்றிராணியாருக்குச் சுபமும் அப்போஸ்தலிக்கஆசீர்வாதமும் கூறுகின்றோம்.

மேய்ப்பர்களின் தலைவராகிய நித்திய சருவேசுரன், திருச்சபை முழுவதையும் மேய்த்து ஆண்டுகொண்டு வரும்படி அடியேமாகிய எமக்குப் பணித்தருளிய உத்தியோகமானது, கர்த்தருடைய மந்தைகளைச் சீராய் மேய்க்க அறிந்தவர்களும் வல்லபர்களுமான அதிபதிகளை அந்தச்சபையிலேநியமிக்கும் கடமையை நம்மிற் சுமத்துகிறது. நாம் நமது கடமையை நிறைவேற்றும்போது தக்ககாரணங்களையிட்டு, சமயா சமயம், நமதுமந்தைகளை மேய்க்கும் மேற்றிராணியாருக்கு உதவிபுரிந்து அவருக்குப்பின் மேற்றிராணித்துவ பதவியையேற்றுக் கொள்ளக்கூடியதாக துணை மேற்றிராணியாரை நியமிக்கும் சந்தர்ப்பம்ஏற்படுகிறதும் உண்டு. இவ்வித சந்தர்ப்பம் ஏற்படும்போது மேற்றிராணியாரின் துணைவர் சித்தியாகவும், நயமாகவும் தமது கடமையை ஆற்றும் பொருட்டு அவருக்கு மேற்றிராணித்துவ பட்டத்தையும் மகிமையையும் வழங்கி, முற்போது பிரஸ்தாபமாய் விளங்கித் தற்போது நலனின்றிக் கிடக்கும் ஒரு மேற்றிராசனத்தின்பட்டப் பெயரையும் கொடுப்பது வழக்கமாகும்.

ஆகவே, இலங்கைத்தீவில் விளங்குவதும், கொழும்பு அதிமேற்றிராசன ஆதீனத்திலுள்ளதுமான யாழ்ப்பாண ஆசனத்தின் மேற்றிராணியாராகிய—வந்தனைக்குரிய நமதுசகோதரர் ஜோண் அல்விறெட் கியோமார் ஆண்டவரின் சுகத்தாழ்வான நிலைமை காரணமாக, அவருடைய வேண்டுகோளுக்கிணங்கி அவருக்கு ஒருதுணை ஆயரைநியமிக்கத் தீர்மானித்துள்ளோம்.

கிறீஸ்துவநாமத்தை அகில உலகத்திலும் பரப்பும்பணியைக் கொண்ட, பரிசுத்த ரோமைத் திருச்சபையின் கருதினல் சங்க சகோதரரின் ஆலோசனையோடும் வேறு தகுந்த ஒப்பனையான சாட்சியங்களாலும் மேய்ப்பனுக்குரிய கடமையை நிறைவேற்றக்கூடிய தகுதியுள்ளவர் நீரே யென்பதை ஆராய்ந்துணர்ந்தோம். ஆகவே, நமக்குரிய அதிமேலான அதிகாரத்தைக் கொண்டு யாழ்ப்பாணத் திருச்சபையின் ஞான, லௌகீக ஆளுகையை உமதுகரங்களில் ஒப்படைத்து, உம்மை, குறித்த மேற்றிராசனத்தின் துணைஆயராகவும், தற்போதைய மேற்றிராணியாரின்பின் தொடர்ந்து மேற்றிராணியாராய்வர் உரிமை கொண்டவராகவும் நியமித்துப் பிரகடனம்செய்கின்றோம்.

இவைகாரணமாக, திருச்சபை ஒழுங்குகளின்படி துணை ஆயருக்குரிய உரிமைத்தத்துவங்கள் அனைத்தையும் உமக்கு வழங்குகின்றோம். இன்னும் இந்த மேலான அப்போஸ்தலிக்க அதிகாரத்தைக்கொண்டு பைசசினுமாகாணத்து பிளாடியாநகரத்தின் காலியாயிருக்கும் மேற்றிராசனப்பட்ட மகிமையையும் உமக்குச் சூட்டுகின்றோம்.

இவற்றால் ஒருமேற்றிராணியாருக்குரிய சகல உரித்துகள் பொறுப்புகள், சுதந்தரங்கள், கடமைகளோடு, அவ்வுன்னத பதவியோடுசேர்ந்த பிறகடமைகளையும் சேர்த்து உமக்கு கொடுத்துப் பொறுப்பளிக்கின்றோம்.

எப்போதாவது எக்காரணத்தினலாவது யாழ்ப்பாணமேற்றிராசனப்பதவி காலியாகுமானல் அப்பதவிக்கு நீரே முறைமையான மேற்றிராணியாராகவும், மேய்ப்பராகவும்வர, உரிமையுள்ளவராக இத்தால் தம்மைத் தெரிந்து அறிக்கையிடுகின்றோம். யாழ்ப்பாணமேற்றிராணித்துவ பதவியை நீர்ஏற்கும் பட்சத்தில் தற்போது உமக்கு வழங்கப்பட்டுள்ள பிளாடியாநகர மேற்றிராணியார் எனும் மகிமைப்பட்டம் அற்றுப்போய்விடும் என்பதைக் கவனித்துக்கொள்ளுவீராக.

நீர்மேற்றிராணித்துவ அபிஷேகம்பெற்று, துணை ஆயர்பதவியை ஏற்குமுன் திருச்சபைநிபந்தனைப்படி பரிசுத்த ஸ்தானத்தோடு ஐக்கியமாய்த்தொடர்பு பூண்டுள்ள மேற்றிராணிமாருள்ளே நீர் விரும்பிய ஒருவரால் திரு அபிஷேகத்தைப் பெறுமுன் கத்தோலிக்க விசுவாச அறிக்கைப்பிரமாணம் செய்துகொள்ளவேண்டுமென்பதே நமதுசித்தமாகும்.

அபிஷேகம் பெற்றஉடனே நீர்செய்துகொண்ட விசுவாச அறிக்கைப் பிரமாணப்பத்திரத்தில் நீரும், உம்மை அபிஷேகிப்பவரும் கையெழுத்து முத்திரையிட்டு, அதை விசுவாசப் பரப்புதற்சபைக்கு அனுப்பிவைக்குமாறு ஏவுகின்றோம்.

மேலும், உமது விசேஷ வசதியைக்கருதி —ரோமைநகருக்கு வெளியேயுள்ள—உமக்குப் பிடித்தமான எந்த ஒரு மேற்றிராணியாரிடமாவது திருஅபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளவும், அவருக்குத்துணைவர்களாக அவரைப்போன்று பரிசுத்த ஸ்தானத்துடன் தொடர்புபூண்ட வேறுமிரு மேற்றிராணமாரைத் தெரிந்துகொள்ளவும்தக்க சுதந்தரத்தை உமக்குக் கொடுப்பதோடு, வந்தனைக்குரிய நமது சகோதரராகிய அபிஷேகிக்கும் மேற்றிராணியாரும், நமது அதிகாரத்தைக் கொண்டு, குறித்த திருச்சடங்கை முறையாய் நிறைவேற்றவும் இவ்வுரிமைப்பத்திரத்தால் தத்துவம் கொடுக்கின்றோம்.

ஆயினும் நீர் விசுவாச அறிக்கைப் பிரமாணம்செய்துகொள்ளாமல், திருஅபிஷேகத்தைப் பெறவாவது, உம்மாற் தெரியப்படும் மேற்றிராணியார் அதை உமக்குக் கொடுக்கவாவது துணியப்படாதென்று கண்டிப்பாய்க் கற்பிக்கின்றோம். இந்த நமது கற்பனையிற் தவறுவீர்களானல் நீரும், உம்மை அபிஷேகிக்கும் மேற்றிராணியாரும்திருச்சபைப் பிரமாணங்களின் கண்டனங்களுக்கு ஆளாவீர்கள்.

நமது வந்தனைக்குரிய சகோதரராகிய இலங்கைக் கொழும்பு அதிமேற்றிராணியார், ஓர்நாள் தமது ஆதீனமேற்றிராணியாராய்வரப்போகும் உம்மை, ஒரு சகோதரனைப்போல் பாவித்து—நீர் துணை ஆயராயிருக்கும்போதுதானும்—தேவமகிமைக்கும் திருச்சபையின் நன்மைக்குமான விஷயங்களில் நீர்கேட்கும உதவிகளை உமக்குச் செய்துதந்து, உமக்குக் கையளிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணத் திருச்சபை செழிக்கத்தக்கதாய் —உமக்கு வேண்டிய நல்மனச் செல்வங்களையெல்லாம் உவந்தளிக்குமாறு அவரைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அதே மேரையாய், யாழ்ப்பாணத்திருச்சபை ஆதீனத்திலுள்ள குருமாரும் விசுவாசிகளுமான நமது பிரியமக்களும், தம்மை—வருங்கால ஞானப்பிதாவும், மேய்ப்பருமெனப் பயபக்தியாய்ஏற்று, உரியமரியாதையோடு உபசரித்து,—துணை ஆயராய் இருக்கும்போதுதானும்—உமது நற்புத்திகளையும் கட்டளைகளையும் பணிவோடு கேட்டுநடக்கக் கற்பிக்கின்றோம்.

நீர் அவர்களை ஞானப்புத்திரராகப்பெற்றமைக்கும், அவர்கள் உம்மைஞானப்பிதாவாக அடைந்தமைக்கும் நீங்கள் எல்லோரும் அகமகிழ்ச்சி கொள்ளுவீர்களாக.

இறுதியாக, யாழ்ப்பாணத் திருச்சபையை இவ்வேளை ஆளுகிறவரின் விமரிசையான கட்டளைப்படி—இந்த நமதுசாசனம் மேற்றிராசனக் கோவிலிலே,—அடுத்துநிகழும் கடன் பூசை வேளையிலே—பிரசங்கபீடத்தில் நின்று பிரசித்தமாய் வாசிக்கப்படவேண்டுமென்று கற்பிக்கின்றோம்.

கர்த்தரின் வலதுகரம் உமக்குத் தயவாய்உதவிசெய்ய—நீர் உமது மேய்ப்பருக்குரிய முயற்சியினலும், இடையருத உழைப்பினலும், இப்போதைய மேற்றிராணியாருடன் நீர் ஒத்துழைப்பதினலும், யாழ்ப்பாணத்திருச்சபை ஞானமாகவும் உறுதியாகவும்ஆளப்பட்டு, தினமானம் லௌகீக,வைதீக நலன்கள்விர்த்தியாகுமென்று உறுதியாக நம்புகிறோம்.

இது ரோமாபுரியில் புனித இராயப்பர் மகாஆலயத்தில் இரட்சணியத்தின் ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொன்பதாவது ஆண்டு பங்குனிமாதம் 10-ந்திகதி நமது ஆளுகையின் பத்தாவது வருஷத்தில் விடுவிக்கப்பட்டது.

பரிசுத்த ரோமைத்திருச்சபையின் அத்தியட்சகருக்காக
ஒப்பம் ✠ கருதினல் மார்செற்றி
செல்வக்கியானி,
பரிசுத்தகல்லூரி அதிபர்.

அல்விறெற் லிபெருற்றி,
அப்போஸ்தொலிக்க
மந்திரசபை லிகிதர்.

லூயிஸ் காஸ்,
அல்விறெற் விற்ருலி
அப்போஸ்தொலிக்க
நொத்தாரிசுமார்

பதினேராவது வருடத்தில் வைகாசிமாதம் 5-ந்திகதி அனுப்பப்பட்டது.

அல்விறெற் மாறினி,
சாசனங்களின் பாதுகாப்பாளர்

## பிரியதத்த வங்கி

| | |
|---|---|
| இதுவரையிற் சொல்லியது | 15,89,261 |
| கடந்த இருமாதங்களில் சொல்லியது | 3,72,420 |
| மொத்தம் | 19,61,681 |

சேபமாலை

| | |
|---|---|
| இதுவரையிற் சொல்லியது | 1,30,198 |
| கடந்த இருமாதங்களில் சொல்லியது | 11,154 |
| மொத்தம் | 1,41,352 |

குறிப்பு :— இம்மேற்றிராசனத்துள் அடங்கிய பாடசாலைப் பிள்ளைகளாற் சொல்லப்படும் பிரியதத்த, செபமாலைத் தொகைகளைப் பிரியதத்த வங்கிக்கு அனுப்பிவைக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத் தபால்

நமது நிருபர்

**சுதந்திர ஞாபகசின்னம்:**

சுதந்திர ஞாபகசின்ன அஸ்திவாரக் கல்நாட்டுவிழா சென்ற மாசி மாதம் சுதந்திரஞாபகநாளில் நடைபெற்றதல்லவா? பின்பு மத்தியஅரசாங்கத்துக்கும் கொழும்பு நகராண்மைக் கழகத்துக்கும் இடையில் சில சிக்கல்களை கிளப்பிவிட்டது இந்த ஞாபகசின்னம். இப்பொழுது இச்சிக்கல்கள் யாவும் சுமுகமாகத்தீர்ந்து கட்டிடவேலைக்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. நாற்பது தூண்களைக்கொள்ளும் இம்மண்டபம் இலங்கையின்சிற்பக்கலை நுணுக்கங்களைப் பின்பற்றி அமைக்கப்படும்.

**சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர் புதியமேற்றிராணியாரை உபசரித்தல்:**

கொழும்பிலுள்ள சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள் யாழ்ப்பாணத் துணைமேற்றிராணியார் ஆகிய மகாவந். ஜே. எமிலியானுஸ் பிள்ளை, ஓ. எம். ஐ. ஆண்டவர் அவர்களின் அபிஷேகத்தின்பின் தங்கள் மகிழ்ச்சியைக் காண்பிப்பதற்கு அறிகுறியாக ஜீ. ஓ. எச். ஹொட்டலில் 19-6-49-இல் ஒரு விருந்துபசாரம் நடத்தினார்கள். இருநூற்றுவர்வரை பந்திஅமர்ந்தனர். கல்விமந்திரி, தொழில்சமூகசேவைமந்திரி, கல்விமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி, செனேட்டர்கள்: நாகநாதன், இராசேந்திரா, ஊர்காவற்றுறைப் பார்ளுமன்ற அங்கத்தவர் ஏ. எல். தம்பிஐயா ஆகிய பிரமுகர்களும் பலபழைய மாணவர்களும் அவர்களின் மனைவிகள் பிள்ளைகளும் விருந்தில் பங்குபற்றினார்கள். வழக்கறிஞர் அ. ஞானப்பிரகாசம், மேற்றிராணியாருக்குப் பழைய மாணவரின் பெயரால் நவைச்சுவை மிக்க வாழ்த்துக்களைத் தெரிவித்தார். புதியமேற்றிராணி ஆண்டவர் தகுந்த விதமாக விடைஅளித்தார். விருந்தினை வரவேற்று வழக்கறிஞர் செரூபிம் அவர்கள் பேசினார்கள். கொழும்புநகரமேயர் விருந்தினர் பேரால் தமது நன்றியைத் தெரிவித்தார். சம்பத்திரிசியார் கல்லூரியையும் பழையமாணவரையும் வியந்து கல்விமந்திரி அவர்கள் பேசினார்கள். அதிவண. லோங் சுவாமியார் நன்றிஉரை புகன்றார். கல்லூரிவாழ்த்துக் கீதத்துடன் விருந்து முடிவெய்தியது.

**சற்பிரசாதத்திருநாள்:**

கொழும்பு மேற்றிராசனக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் சற்பிரசாதச் சுற்றுப்பிரகாரம் சென்றஞாயிற்றுக்கிழமை (19-6-49) வெகுசிறப்பாக நடந்தேறியது. பற்பல பத்திக் கூட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் விருதுகளின்பின்னால் எறும்புபோல் ஒருவர்பின் ஒருவராய் பாடிக்கொண்டும், செபித்துக்கொண்டும் வணக்கத்துடன் சென்றதையும், அதிமேற்றிராணியார் குருமார்கூட்டம் முன்செல்லக் கதிர்ப்பாத்திரத்தைக் கைகளிலேந்திச் சென்றதையும், இன்னோரன்னபந்தர்ச் சிறப்பு, வீதிச்சிறப்புகளையும் கண்ட கண்களும், நாளுநாதமணித் தொனிகளையும், விசுவாசிகளின் ஆனந்தஆர்ப்பரிப்புக் குரற்தொனிகளையும் கேட்ட காதுகளும் பாக்கியம் பெற்றவையாமே. அர்ச். ஆசீர்வாதப்பர்கல்லூரிமுன்றில், கொட்டாஞ்சேனை கத்தோலிக்க இளைஞர்சங்கமண்டபம், நல்லாயன்கன்னியர்மடவாயில் ஆகிய இடங்களில் போடப்பட்டிருந்தசித்திரப்பந்தர்களில் ஆசீர்வாதம் அருளப்பட்டது. ஈற்றில் கோயில்முகப்பில் அதிமேற்றிராணியாண்டவர் அவர்கள் திருஇருதயநாதருக்குத் தமது மேற்றிராசனத்தைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் செபத்தை வாசித்து ஆசீர்வாதம் அருளினார்.

**கொழும்புவாழ் மாதகல்வாசிகள்:**

இவர்கள் சென்றஞாயிறு பிற்பகல் (19-6-49) சென்யோசேப்புக் கல்லூரியிற்கூடி, புதிய மேற்றிராணியார் ஆகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கட்கு ஓர் வரவேற்புபசாரம் நிகழ்த்தினார்கள். இதில் மாதகல்வாசிகள் எல்லாரும், கிறீஸ்தவர்களும் சைவர்களும் பங்குபற்றினார்கள். கொழும்புவாழ் மாதகல்வாசிகள் சங்கத்தின் தலைவராகிய வழக்கறிஞர் அ. ஞானப்பிரகாசம் அவர்களும், மேற்படி சங்கத்தின் அமைச்சராகிய எஸ். இராமநாதன் அவர்களும், ஆசிரியர் அ. ஞானப்பிரகாசம் அவர்களும் மேற்றிராணியாண்டவரை வரவேற்றுப் பேசினார்கள். மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் தாம் கட்டளைக் குருவாயிருந்தபங்கு மாதகலே என்றும் அங்குள்ளவர்கள் பழையகாலத்திலிருந்தே வேதவிசுவாசம் உள்ளவர்களென்றும், அங்குள்ள கிறீஸ்தவரல்லாதார் தம்மாட்டு மிகுந்தஅநுதாபம் உள்ளவர்களென்றும்கூறி அவர்கட்குத் தம் நன்றியைத் தெரிவித்தார். வந்திருந்தவர்களுக்குச்சிற்றுணவும் அளிக்கப்பட்டது.

## யேசுவின் திருஇருதய [illegible]நசம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மையும் அத்தியந்தவிதமாய் நேசிக்கிறார்.

யேசுக்கிறீஸ்துநாதர் அர்ச். தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய தேவதிருச்சுதன். சர்வேசுரனாகிய மட்டும் அவர் தம்மிலே தாமாயிருப்பவர்; ஆதியந்தமில்லாத அரூபி; அங்கு இங்கு எனதபடி எங்கும் பிரகாசமாயிருப்பவர்; சர்வசெல்வ பாக்கிய சம்பன்னர்; சகலத்தையும் சிருஷ்டிக்கவும், ஆளவும், நடத்தவும், அழிக்கவும் வல்லமையும் உரிமையும் பூண்ட சர்வஞான சத்தியசுரூபி. எல்லா நன்மைகளையும் தம்முள்ளே சம்பூரணமாய் அடக்கியவர். ஒரு வார்த்தையினால் உலகமனைத்தையும் உண்டாக்கினவர். மானிடஜென்மம் அத்தனையும் அவர் பாதத்துகள். மனிதருடையஉதவி அவருக்கு எத்துணையேனும் தேவையில்லை.

(தொடரும்)

## கொழும்பு - கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார் திருநாள்

கொழும்பு, கொச்சிக்கடையின்கண் திருக்கோவில் கொண்டிருக்கும்கோடி அற்புதர் அர்ச். அந்தோனியாரின் திருநாள் வழமைபோல் சென்றமாதம் 28-ந்திகதி ஆரம்பமாகி இம்மாதம் 13-ந்திகதி அலங்காரமாய்க் கொண்டாடப்பட்டது. 12-ந்திகதி மாலை 7-30 மணிக்கு கொழும்பு அதிமேற்றிராணியாண்டவரான அதிமகாவந். தோமாஸ்குரே ஆண்டவரவர்கள் தலைமையில் வேஸ்பர்பாடப்பெற்றது. 13-ந்திகதி திருநாள்தினத்தன்று அதிகாலை 4-30 மணி முதல் 8-30 மணிவரையில் தொடர்ந்து பலதிவ்வியபலிபூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. 7 மணிப் பூசையானது யாழ்ப்பாணத்துணைமேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I. ஆண்டவரவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 8-30 மணிக்கு திருநாட்பூசை வண. செல்மர் சுவாமிகளால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை 5-30 மணிக்கு அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபம் நறுமணங்கமழும் மலர்களாலும், மின்சாரஇணைப்புக்களாலும் அலங்கரிக்கப்பட்ட கேடயத்தில் எழுந்தருளச்செய்து கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவரல்லாதாருமான பல்லாயிரம் பக்தர் கோடிகளான சனசமுத்திரம் புடைசூழ்ந்து ஜெகஜோதியாய் மின்சார தீபங்களாலும், பலவர்ணக் கொடிகளாலும், துவசதோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த கொச்சிக்கடை, ஜிந்துப்பிட்டி, வென்நோயன், புதுச்செட்டித்தெரு, ஜம்பட்டாத்தெரு ஆகிய தெருக்கள்வழியே பவனிவரலாயிற்று. அநேக இடங்களில் கிறிஸ்தவர்களும், அல்லாதாரும் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபத்திற்குப் பொன்மாலைகளும், மலர்மாலைகளும் சூட்டினார்கள். சுமார் 7-15 மணிக்கு திருச்சுரூபம் தேவாலயத்தைச்சேர்ந்ததும் அதிமகாவந். தோமாஸ்குரே அதிமேற்றிராணியாண்டவரவர்களால் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதமும் திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன. இத்திருவிழாவைமுன்னிட்டுத் தேவாலயமானது உள்ளும்புறமும் அநேக நூற்றுக்கணக்கான மின்சார தீபங்களாலும், சோடினைகளமைந்த கேட்டின்சீலைகளாலும் அர்ச். அந்தோனியார் கத்தோலிக்கர் சங்கத்தின் உபயத்தில் தேஜோமயமாகச் சிங்காரிக்கப்பட்டிருந்தது. பௌத்தசமயத்தவரான கொழும்பு நகரசபையின் உதவிமேயர் ஸ்ரீமான். வீ. ஏ. சுகததாச அவர்கள் கேடயத்தின் அருகே நின்றும் சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொண்டார்.

இப்பத்திரிகையில் முன்அறிவித்திருந்தபடியே, இத்திருநாளை முன்னிட்டு இங்குவரும் யாத்திரீகர்கள் தங்குவதற்கு அர்ச். அந்தோனியார் கோவிலை அடுத்திருக்கும் ஜம்பட்டாத் தெருவில் ஓர்விடுதிஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இம்மண்டபத்தில் யாழ்ப்பாணம் கரையூர்வாசிகளான யாத்திரீகர்களும், கண்டி, மட்டக்களப்பு, இரத்தினபுரி, நீர்கொழும்பு, களுத்துறைஆகிய பலதூரவிடங்களிலிருந்தும், 600 யாத்திரீகர்களுக்குமேல் தங்கிஇருந்தார்கள். இவர்களுக்குக் கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார் கத்தோலிக்க சங்கச்செலவில் இருக்க இடமும் இலவசச்சாப்பாடும் உதவப்பட்டது. திருநாள் ஆரம்பதினம் முதல் 13-ந்திகதி வரையில் விட்டுவிட்டுத் தொடர்ந்துபெய்துவந்த மழையானது, சுற்றுப்பிரகாரநேரத்திலும், கார்மேகம்திரண்டு சிறுதுளிகளாய்விழ ஆரம்பித்துவிட்டது. இதைக்கண்ட சனசமுத்திரம்போன்ற பக்தர்கோடிகள் கலக்கமுற்றனர்; என்னே அற்புதம்! திரண்டுவந்த கார்மேகங்களெல்லாம் மின்னலைப்போல ஓடிமறைந்தன. சுற்றுப்பிரகாரம்முடிந்து பலமணிநேரம் வரை மழைபெய்யவில்லை. இது கோடி அற்புதர்செய்த ஓர் புதுமையென்றே சொல்லவேண்டும்.

எம். எஸ். பேர்னுந்து

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

ஆசாரத்துக்குரிய மசனட் ஆண்டவரிடமும், கொன்சால்வேஸ் சுவாமியாரிடமும் எனக்காக இரந்துமன்றாடும்படி கேட்டுக்கொண்டேன். என்கருத்துஅனுகூலமாயிற்று. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

---

—கொச்சித் துறைமுகம் விரைவில் பெரியஓர் கடற்தளமாகுமென்று இந்தியஅரசின் கடற்படைப் பிரதமசேனாபதி பாரிஎன்பவர் தெரிவித்தார். கொசசியில்அக்கடற்தளத்தைஅமைப்பதற்காக 12 இந்திய கடற்படை அதிகாரிகள் இப்போது இங்கிலாந்தில் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்றும் அவர்கள் அடுத்தவருஷக்கடைசியில் இந்தியாதிரும்புவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.



## விற்பனைக்கிருக்கின்றன

### மகாமனந்திரும்புதல் — — இயக்கப் பிரசங்கங்கள்

கடந்த வருடம் மருதமடுத் திருத்தாயார் தமதுபதியை விட்டு எழுந்தருளி, யாழ்ப்பாண மேற்றிராசனமெங்கும் பவனிசெய்தருளினவல்லவா? அப்பவனி வருகையானது மகாமனந்திரும்புதல் இயக்கம் என அறியப்பட்டது. இந்த மகாமனந்திரும்புதல் இயக்க சம்பந்தமாகவேண்டிய – நேர்த்தியான – பிரசங்கங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூல், காலஞ்சென்ற வண. எஸ். ஆசீர்வாதநாவலர் சுவாமியாராலியற்றப்பட்டது. வண. ஆசீர்வாதநாவலர் சுவாமியார் இயற்றிய நூலென்றால்—இதன் பெருமையை எடுத்துரைக்கவேண்டியதில்லை. எழுதுவதிலும் பிரசங்கிப்பதிலும் கைதேர்ந்தவராகிய இக்குருவானவர், பாவிகளின் மனந்திரும்புதலுக்காக எழுதிய பிரசங்கங்களை எவர்தான் வாசித்தறியாமலிருக்கலாம்? இப்பிரசங்கங்களை முறையாய், நிறைவாய் வாசித்து எந்தப் பாவியும் மனந்திரும்பாமல் இருக்கமுடியாது இதில், மெய்யான மனந்திரும்புதலுக்கு – செபமும், தபமும அவசியமென்பதை உறுத்திக்காட்டப்பட்டிருக்கிறது.

தபத்தைச் சார்ந்த விஷயங்கள், 4 பகுதிகளில் விபரமாகவும் விளப்பமாகவும் விபரிக்கப்பட்டிருக்கின்றன. தபத்துக்குத் துணைபுரியும் விஷயங்கள் இன்னும் 4 பிரிவுகளில் விளக்கப்பட்டிருக்கின்றன. செபத்தைச்சார்ந்த விஷயங்கள் எட்டுப் பிரிவுகளாக விபரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் விளக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு காரியத்தையும் எல்லாக் கத்தோலிக்கரும் ஊன்றிப் படிக்கவேண்டும்.

இப்புத்தகம் ஒவ்வொரு கத்தோலிக்கர் கையிலுமிருக்கவேண்டும். பாவத்தைவிட்டு விலகுவதற்கும், உத்தமதனத்தில் நிலைகொள்வதற்கும் அவசியமான விஷயங்களெல்லாம் இப்பிரசங்கங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. மாதாபத்தியுள்ளவர்களெல்லோரும் இப்புத்தகத்தை வாங்கிப் படியாதிருக்கமாட்டார்கள். தெளிவான–விளக்கமான–சாதாரணநடையில் நயமாக எழுதப்பட்டிருக்கிறது. எல்லோரும் இப்புத்தகத்தை வாங்கிப் படித்துப் பலனடையவேண்டும்.

விலை ரூபா 1-00. தபாற்செலவு 30 சதம். தேவையானோர் பின்வரும் விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர், அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேசவர்த்தமானம்

## மருதமடுவுக்கு றெயில்வசதிகள்

மடுமாதா ஆலயத்திற்குச் செல்லும் யாத்திரிகரை றெயில்மார்க்கமாகவும், பஸ்மார்க்கமாகவும் ஏற்றிச்செல்லப் புதியஏற்பாடுகளை றெயில்வேப்பகுதி செய்திருக்கின்றது. இந்த ஏற்பாடுகள் ஆனிமாசம் 22-ந்திகதி முதல் ஆடி மாசம் 4-ந்திகதிவரை அனுசரணையிலிருக்கும். சாமான்களை அனுப்புவதற்காகச் செய்யப்பட்டிருக்கும் புதிய ஏற்பாடு சென்ற 20-ந் திகதியோடே அனுசரணைக்கு வந்துவிட்டது. அது ஆடிமாசம் 5-ந்திகதிவரை அனுசரணையில் இருக்கும். பிரயாணிகள் மடுறோட் றெயில்வேஸ்ரேஷன்வரையிலும் அங்கிருந்து மடுமாதா ஆலயத்துக்குப் பஸ்ஸிலும் அ[illegible]துச் செல்லப்படுவார்கள். இரண்[illegible]க்கும் சேர்த்து மடுறோட்ஸ்ரேஷனுக்கு மற்றெல்லா ஸ்ரேஷன்களிலுமிருந்து ரிக்கெற்றுகள் வழங்கப்படும். மறுபடி திரும்புகையில் மடுமாதாவின் ஆலயப்பகுதியிலேயே தற்காலிகமாக நிறுவப்பட்டிருக்கும் இடத்திலிருந்து பிரயாணத்துண்டுகள் வாங்கிக்கொள்ளலாம். ஆனி மாசம் 18-ந்திகதியிலிருந்து ஆடிமாசம் 7-ந் திகதிவரை இந்தியகோச்சில் நேராகத் தலைமன்னாருக்கும், தலைமன்னாரிலிருந்தும் பிரயாணஞ்செய்பவர்களுக்கு மட்டுமே சயனவண்டிவசதிகள் செய்து கொடுக்கப்படும். சயனவண்டிகள் காலியாய் இருந்தாலொழிய இடைஸ்ரேஷன்களில் இறங்கும் பிரயாணிகளுக்கு இந்தியகோச்சில் அவை கொடுக்கப்படமாட்டா. மடுறோட் ஸ்ரேஷனிலிருந்து மடுமாதா ஆலயத்துக்குச் செல்லும் 7 மைல் தூர பஸ்பிரயாணத்துக்கு வளர்ந்தவருக்கு 75 சதவீதமும் 12வயதுக்கும் 3 வயதுக்குமிடைப்பட்டவர்களுக்கு 40 சதவீதமும் கட்டணம் வசூலிக்கப்படும். இந்தியகோச்சி[illegible]பிரயாணஞ்செய்யும் மடுமாதா ஆலய யாத்திரிகளுக்குச் சயனவண்டி கொடுபடமாட்டாது.

## சேவைக்கு வாழ்க்கை அர்ப்பணம்

கொழும்புநகரிலுள்ள சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர்சங்கம் சென்ற 19-ந்திகதி கிறண்ட் ஓரியன்ரல் ஹொட்டலில் யாழ்ப்பாணத் துணை மேற்றிராணியார் மகாவந். டக்றர் ஜே. எமிலியானுஸ்பிள்ளைக்கு ஓர் விருந்துபசாரம் அளித்தது. செனற்றர் ஏ. கார்டினர் இந்த வைபவத்திற்குத் தலைமை வகித்தார். தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்திற்குப்பதிலளிக்கையில் மேற்றிராணி ஆண்டவரவர்கள் கூறியதாவது:—"எனதுசேவை மக்களின் சன்மார்க்க ஆத்மீக துறைகளிலுள்ள தேவைகள்மட்டிலும் சம்பந்தப்பட்டதாக வரையறுக்கப்பட்டதாக இராது. எனதுசேவை மக்களின் லோகாதயத் தேவைகளைத் தழுவியதாகவும் இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் நான் சனங்களுக்காக எனது வாழ்க்கையையே அர்ப்பணம்செய்ய ஆயத்தமாய் இருக்கிறேன்." மகாவந். டக்றர் எமிலியானுஸ்பிள்ளையைப் பாராட்டுவதற்குமட்டுமன்றி, சம்பத்திரிசியார்கல்லூரிப் பழையமாணவர்கள் உவகைகொள்வதற்காகவும் இந்த வைபவம் ஒழுங்குசெய்யப்பட்டதாகவும் திரு. ஏ. ஞானப்பிரகாசம்என்பவர் கூறினார்.

## மானிப்பாய்க் கிராமச் சங்கம்

மானிப்பாய்க் கிராமச் சேமாபிவிருத்திச் சங்கத்தினுதரவில் சென்ற வியாழக்கிழமையன்று ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. எஸ். எச். பேரின்பநாயகம்தலைமைவகித்தார். வடமாகாண ஏசண்டர் 'நில அபிவிருத்தியும் உணவு உற்பத்தியும்' என்னும்விஷயம்பற்றிப் பேசினார். உணவு உற்பத்திக்கும், குடியானவர்களுக்கு உதவி செய்யவும் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை அவர் விவரித்துக்கூறினார். திருவாளர்கள்: தம்பிப்பிள்ளை, கே. சொர்ணலிங்கம், ஏ. செல்லையா, சி. என். தேவராஜன், முதலியார் தியாகராஜா, லூயிஸ் சுப்பிரமணியம் முதலியவர்களும் கூட்டத்தில் பேசினர்.

## ஏழுமாடி நவீன அமைப்பு

பாதுகாப்பு மந்திரி காரியாலயத்தின் பாவிப்புக்காகக் கொழும்புநகரத்தின் உயர்ந்த கட்டடங்களிலொன்றென மதிக்கும்படியான ஒரு கட்டடம் கோட்டையின் மத்தியிலே நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்புதிய கட்டடம் ஏழுமாடிகளுடையதாயும் கிறண்ட் ஓறியன்ரல் ஹொட்டலுக்கும் செனற்சபை மண்டபத்துக்குமிடையே தற்போதுள்ள பதி[illegible] இடத்திலே அமைக்கப்படும். இந்த இடம் தற்போதிருக்கும் நிலைமையினுலே வேலையைத்தொடங்குமுன் அதிக்சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருக்கின்றது. இப்பிரமாண்டமான [illegible]ட்டடத்துக்குத் தேவையான உருக்குச் சாமான்கள்யாவும் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்படவிருக்கின்றன. இதற்குகந்த தளபாடங்கள் அங்கிருந்துவந்துசேர்ந்ததும் வேலை தொடங்கும். இங்கிலாந்துக்கு 140 தொன் இரும்புக்கு ஆர்டர் கொடுபட்டிருக்கிறதென அறியவருகிறது.

## பரிபூரண இலவசக்கல்வி

புரட்டாசி மாசத்தில் கல்விப்பகுதியாரால் நடத்தப்படவிருக்கும் ஒரு பரீட்சைமுடிவையொட்டி இத்தீவிலுள்ள 54 மத்திய பாடசாலைகளில் 810 மாணவர்களுக்கு இலவசக்கல்வி, இலவசச்சாப்பாடு, புத்தகங்கள், உடை முதலியவைகளும் அளிக்கப்படும். அரசாங்கப்பாடசாலைகளையும்உதவிபெறும் பாடசாலைகளையும்சேர்ந்த மாணவர்கள் பிரஸ்தாப பரீட்சையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்களெனத் தெரியவருகிறது.

## சுதந்திர ஞாபகார்த்தம்

இலங்கைச்சுதந்திர ஞாபகார்த்தமாக மண்டபம் ஒன்றை அமைப்பதற்கான திட்டங்கள் தயாராகிவிட்டன. கட்டடவேலை கூடியசீக்கிரமாவில் ஆரம்பமாகும். கட்டிடவேலையை ஆரம்பிப்பதற்காக 10,000 ரூபாஏலவே ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதாம். ஆனல் கட்டிட முழுத்தொகை எவ்வளவில் முடிவுபெறுமென்று கணக்கிடப்படவில்லை. சுதந்திரமடைந்த முதலாவது ஆண்டு தினத்தன்று நிகழ்ந்த வைபவத்தில் பிரதமமந்திரி டி. எஸ். சேனநாயக அவர்களால் அதற்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. இலங்கைச் சிற்பமுறையில்தான் சுதந்திர ஞாபகார்த்த நிலையம் நிறுவப்படும். விசேஷ வைபவங்களின்போது ஆயிரக்கணக்கானவர்கள் உட்காருவதற்கான இடவசதியுள்ளதாயிருக்கும். சுமார் 40 தூண்கள் அமைக்கப்பட்டு 15 அடி உயரத்தில் ஓர் மண்டபம் அமைக்கப்படும். போர்வீரர், அணிவகுப்புப்படைகளைப் பார்வையிடுவதற்கான வசதிகளும்செய்யப்படும். அடுத்தவருட சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்குமுன் இக்கட்டிடவேலை மிகுதிறமையாகவும் செலவுச் சுருக்கமாகவும் முடிக்கப்படுமாம்.

## யானைக்கால் நோய்க்கு ஆஸ்பத்திரிகள்

யானைக்கால்நோயைத் தடைசெய்வதற்காக இரண்டு மத்திய ஆஸ்பத்திரிகளை நிறுவ உடுவா, பிங்கிரியா ஆகிய இடங்களில் பொருத்தமான இருஸ்தலங்களை டக்றர் ஏ. உடவத்த என்பவர் தேர்ந்தெடுத்துள்ளார். சமீபத்தில் பிங்கிரியாவுக்கு விஜயம்செய்த டக்றர் தம்பையா என்பவர் நிறுவப்படவிருக்கும் இவ்விரு ஆஸ்பத்திரிகளுக்கும் அனுமதி கொடுத்துள்ளார். இதற்கு முந்திய யானைக்கால்நோய்த் தடை முயற்சிகள் பயனற்றுப்போன காரணமாகவே இவ்விரு ஆஸ்பத்திரிகளும் நிறுவப்படவிருக்கின்றன.

---

### வாசிப்புப்பாட - பேச்சுப்பாட

# உபகரணங்கள்

கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கு வாசிப்புப்பாட உபகரணங்களாக $8\frac{1}{2}'' \times 5\frac{1}{2}''$ அளவில் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 'அ'தொடக்கம் 'வெள' வரையும் மாணவர் படிக்கவேண்டிய எழுத்துக்கள் அடங்கிய 106 படங்கள் பல வர்ணங்களில் வரையப்பட்டும், சொற்களுக்கு அறியவேண்டிய எழுத்து சிவப்புநிறத்திலும், மற்றைய எழுத்துகள் ஊதாநிறத்திலும் பதிக்கப்பட்டும், பேச்சுப்பாட உபகரணங்களாக $13'' \times 8\frac{1}{2}''$ அளவில் 5 கதைகளைக் குறிக்கும் 20 படங்கள் பல வர்ணங்களில் வரையப்பட்டும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. தேவையானவர்கள் நேரில் அல்லது V. P. P. மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மாதிரி பார்க்க விரும்புபவர்களுக்கு இலவசமாக மாதிரிப்படம் அனுப்பப்படும்.

விலை விபரம்: வாசிப்புப்பாட உபகரணங்கள்
106-ம் விலை ரூபா **3-50**

பேச்சுப்பாட உபகரணப் படங்கள்
20-ம் விலை ரூபா **1-50**
(தபாற்கூலி சதம் 30)

Naranthanai,
R. C. Boy's,
Kayts.

S. Aseervatham,
TEACHER.

---

## உழதுண்டு வாழுங்கள்

"அரசாங்க உத்தியோகங்களைநாடி அலைவதிலும்பார்க்க உழுதுண்டுவாழுங்கள், அது நாட்டைச் செழிப்படையச் செய்யும்" என்று சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. குமாரசுவாமி பச்சிலைப்பள்ளி-கராச்சி மக்கள் தமக்குஅளித்த வரவேற்புக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். இயக்கச்சியில் ஒருஉபதபால்கந்தோரும் நவமாய்த் திறக்கப்பட்டது.

## அதிகவட்டிபெற்றதாய் வழக்கு

கொம்பனித்தெருஷார்ட்ஸ்றோட்டைச்சேர்ந்த ஆறுமுகம் நாகப்பன் என்ற நகைஈடுபிடிப்பவர் தம்மிடம் ஈடுவைக்கப்பட்ட பொருளுக்கு அதிகவட்டி வாங்கியதாகவும் பற்றுச்சீட்டு கொடுக்கத் தவறியதாகவும் கொழும்புக்கோட்டில் வழக்குத்தொடரப்பட்டது. எதிரிதாம் குற்றவாளியல்லவெனத் தெரிவித்தார். வழக்கை ஆடி 6-ந்திகதி விசாரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது,

## மூர் சீமாட்டியின் சுகவீனம்

மேன்மைதங்கிய கவர்னர் ஜெனறலின்பாரியார் மூர் சீமாட்டி சுகவீனமுற்றிருப்பதால் அடுத்த சில தினங்களுக்குப் பொதுவிஷயங்கள் யாதொன்றிலும் கலந்துகொள்ளாதிருக்குமாறு அவரது டக்றர் ஆலோசனை கூறியிருக்கிறுரெனத் தெரிகிறது. இராணி மாளிகையில் 24-ந்திகதி நடைபெறவிருக்கும் விருந்துவைபவத்தில் அவர் கலந்துகொள்வதற்குமுன் பூரணசுகம் அடைந்துவிடுவாரென நம்பப்படுகிறது.

## ஏர்பன்சபை விண்ணப்பம்

நீர்கொழும்புப்பட்டினத்தில்வேலையில்லாமல் கஷ்டப்படுபவர்களுக்கு வேலை அளிக்க ஏர்பன்சபையால் ஏற்படுத்தப்பட்ட திட்டத்திற்காக 3,00,000 ரூபா அனுமதிக்குமாறு நீர்கொழும்பு ஏர்பன்சபைத் தலைவர் தொழில் சமூக சேவா மந்திரிகாரியாலயத்திற்கு விண்ணப்பித்துள்ளாரெனத் தெரிகிறது.

## பிரதமர் விஜயம்

பிரதமமந்திரி திரு. டி. எஸ். சேனநாயகஅவர்கள் சென்ற 18-ந்திகதி காலை குருநாகலுக்குவிஜயஞ்செய்தபொழுது நகரசபை அவருக்கு குதூகல வரவேற்பளித்தது. பிற்பகல் நடைபெற்ற யு. என். பி. பொதுக்கூட்டத்திலும் பிரதமருக்கு வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது. போக்குவரத்து மந்திரி சேர் ஜோண் கொத்தலாவலை, உத்தியோகப்பற்றில்லா மந்திரி திரு. ஏ. ஈ. குணசிங்கா ஆதியோருடன் பிரதமர் இங்கு விஜயஞ்செய்திருந்தார். அந்நகரமேயர் திரு. ஆர். ஈ. டி. எஸ். ஜயசுந்தரா பிரதமரை வரவேற்றார். மேயர் அவரை நகரசபையங்கத்தினர்களுக்கு அறிமுகம்செய்து சபைமண்டபத்திற்கு அழைத்துச்சென்று வரவேற்புக் கூறினார். நாட்டின் ஓரேலட்சியத்தைச் சின்னமாகக் குறிப்பிடும் ஒரு வெள்ளிப்பேழையை மேயர் பிரதமருக்குப் பரிசளித்தபின், பிரதமர் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்திற்கு பதிலளித்தார்.

## சுதேச வைத்தியர்

சுதேசவைத்தியர்களைப் பதிவுசெய்வதென்ற அரசினர் ஏற்பாடு சிலமாதங்களுக்குப் பின்போடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. சுதேசவைத்தியச் சட்டத்தைத் திருத்தினுல்தான் பதிவுமுறை சட்டசம்மதமாகுமென அரசாங்கத்துக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதாம். ஆகவே சட்டத்தைத் திருத்தும்வரை பதிவுசெய்வது பின்போட்டுவைக்கப்பட்டிருக்கிறதெனக் கூறப்படுகிறது. சுதேசவைத்யர்களை இருபிரிவுகளாகப் பதிவுசெய்யச் சுகாதார மந்திரி தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. (1) அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களில் பயிற்சிபெற்றுத் தாரதரப்பத்திரங்கள் பெற்றிருப்பவர்கள். (2) ஒரு வைத்தியரிடம் விசேஷ பயிற்சி பெற்றவர்கள். சுதேசவைத்தியர்களைப் பதிவுசெய்யும் வேலை சுதேச மருத்துவக் கல்லூரி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அக்கல்லூரியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 4 லட்சம் தோன் அரிசி

நிகழும்வருடத்தில் இந்தியாவுக்கு 7,90,000 தொன் அரிசியும், இலங்கைக்கு 4,00,000 தொன் அரிசியும் ஒதுக்கிவைப்பதெனச் சர்வதேச அவசாகாலஉணவுக்கொம்மிஷனின்சென்ற 18-ந்திகதிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்யப்படுவதற்குச் சென்றவருஷத்தைவிட இவ்வருஷத்தில் 4,79,000 தொன் அரிசி கூடுதலாக இருப்பதாகவுந் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியாயின் மாசற்ற இருதயப் பற்று

( ஆசிரியர் F. S. C. )

1. மாசில்லா மாமரியே! மங்காக் கற்பின்
    வனிதையர்க்கு அரசியே! எம் அன்பின் தாயே!
நேசமிலா மக்களெல்லாம் நேசித்தும்மை
    நின்னருளே! எம்தாயே எனப் பணிந்து
வாசமலர்ப் பூம்பதத்தை வந்தித் தேற்றி
    வரச்செய்க! பாவிகளின் தஞ்சம் நீயே!
பூசனைசெய் துமைப்போற்றப் புரிவாய் வரமே
    பூசிதநல் இருதயமே மாசில் மரியே!

2. சிவபலி யாய்க்குருசில் நேச மெல்லாம்
    செலுத்தியுயிர் நீத்தன்று யேசு பிரான்
பாவகலி மக்கட்காய்ப் பாரில் என்றும்
    பரிவுறுந்தாய் நீரென்று பகர்ந்தார் அன்றோ
ஆவிபிரி யும்போது ஆரோ தஞ்சம்
    அன்னையெம் ரட்சகி நீ அன்றி வேறார்
பூவிற்கார் ஈட்டிகளால் குத்தப் பட்ட
    பூசிதநல் இருதயமே மாசில் மரியே!

3. நேரிலங்கு வாழ்வுபெறச் செய்வாய் தேவ
    நேசத்தால் நிறைந்துள்ள நிமல தாயே
பாரிலங்கு தூயமனப் பண்ப டைந்து
    பரிவுகொண் டம்பரனை நேசிக் கச்செய்
காரிலங்கு பவப்பிணிக்காய்க் கண்ணீர் சிந்த
    கடிகமழ்பூம் பதத்தாயே! கருணை யுந்தா
பூவிலங்கு இராக்கினியே! சமாதா னந்தா
    பூசிதநல் இருதயமே மாசில் மரியே!

4. பத்திமா நகரியிலே பாலி யர்க்கு
    பகரரிய காட்சிகளை ஈய்ந்தே யன்று
"உத்தமமாம் இருதயத்தின் அரசி நாமே
    உலகுய்யச் செபதவஞ்செய்" கென்ற என்னை
நித்திலஞ்சேர் ஈழத்திற் தாயே வருக!
    நின்பாதக் கழலடியை நோக்கு கின்றோம்
புத்தன்பு பெறச்செய்வாய் புல்லோர் மனதில்
    பூசிதநல் இருதயமே மாசில் மரியே!

அர்ச். செவஸ்தியார் பாடசாலை,
சூரியகட்டைக்காடு,
நானாட்டான்.

F. ST. JOHN CROOS.

## காவலூர் அர்ச். அந்தோனியாரின் வருடாந்த உற்சவம்

காவலூர்ப் பதியின் உதயதிசையின் கண்ணே திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். அந்தோனியாரின் திருநாள் வழமைப்பிரகாரம் 1-6-49 புதன்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. திருநாளுக்கு ஆயத்தமான பதினொரு திருவிழாக்களும் பத்திஅருட்சிக்குரிய விதமாய் நடந்தேறியன. திருநாளுக்கு முதல் நாளாகிய (12-6-49) ஞாயிறு வாரம் பூசைமுடிந்ததும் வண. கட்டளைக்குரவர் அருளுற்ற அற்புதவாத்தரை உயர்ஆசனத்தில் நின்று இறக்கி விசுவாசிகள் வணக்கத்திற்கு மிகஆடம்பர வைபவத்துடன் ஆலயத்தின் மத்தியில் எழுந்தருளச் செய்தனர். அன்று மாலை ஆலயமும், அதன்முன்றிலும் விவிதமின்சார தீபங்களினாலும் அலங்கிர்தமுற்றுவிளங்க, பெருந்தொகையான பக்தர்கள் மத்தியில் வண. கட்டளைச்சுவாமியார், இரு குரவர்கள் துணைபுரிய, மாலையாராதனைபாடித் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் ஈந்தருளினார். அத்தருணம் வண. எஸ். நீக்கிலாப்பிள்ளைச் சுவாமியார் அவர்களால், கருங்கல்மனமும் கரைந்துருகுமாறு அரியதோர் பிரசங்கம் சொல்லப்பட்டது. ஆராதனை முடிந்ததும், ஆலயமுன்றிலில், பெருந்தொகைப் பணச்செலவில் ஓர்வாணவேடிக்கை நடாத்தப்பெற்றது.

அடுத்த நாள் (13-6-49) திங்கட்கிழமை காலை வண. கட்டளைக்குரவர் அவர்கள் பாடற்பூசை நிறைவேற்றிப் பெருந்தொகையான பக்தர்களுக்குத் திருவிருந்துஅளித்தருளினார். அன்று பிற்பகல் 4 மணியளவில் விசுவாசிகள் அற்புதவாத்தரைஅழகுறச்சிங்காரித்த கேடயத்தில் எழுந்தருளச்செய்து, துவசதோரணங்களினால் அலங்காரமுற்று விளங்கிய வீதியினூடே சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுசென்று ஆலயத்தை அடைந்தனர். அடைந்ததும் வண. கட்டளைக்குரவர் அற்புதவாத்தரைக் காத்தேந்தி ஆசிஅளித்து, பரிசுத்தரின் திருப்பண்டத்தை விசுவாசிகளுக்கு முத்திசெய்யக்கொடுத்து நிற்க, பக்தர்களின்பக்திப் பரவசமுற்ற வேண்டுதலுடன் உற்சவம் இனிதே முடிவடைந்தது.

சூ. லீனஸ்

## இஸ்பிரித். திரு. பின்வரும் 3-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 15: 1—10)

அக்காலத்தில் ஆயக்காரரும் பாவிகளும் யேசுநாதருக்குச் செவிகொடுக்க அவரண்டையில் வந்தார்கள். பரிசேயரும் வேதபாரகரும் முறையிட்டு: இவர் பாவிகளைத் தம்மிடத்தில் வரவிடுகிறார். அவர்களோடு புசிக்கிறார் என்றார்கள். அவர் அவர்களுக்கு இவ்வுவமையைச் சொல்லித் திருவுளம்பற்றினதாவது: உங்களில் எவ[னாகி]லும் தனக்கு இருக்கிற நூறுஆடுகளில் ஒன்று காணாமல்போனால், மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும்காட்டில்விட்டுச் சிதறிப்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமட்டும் அதைத் தேடிப்போகிறானல்லவோ? அவன் அதைக் கண்டுபிடித்ததின்பின் களிகூர்ந்து அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து, தன் சிநேகிதரையும் அயல்வீட்டாரையும் வரவழைத்து: காணமற்போன என் ஆட்டை நான் கண்டுபிடித்தபடியால் என்னோடு களிகூருங்கள் என்று அவர்களுக்குச் சொல்வானல்லவோ? அவ்விதமே, தவஞ்செய்ய அவசியமில்லாததொண்ணூற்றொன்பது நீதிமான்களின்நிமித்தம் உண்டாகும் சந்தோஷத்தைவிடத் தவஞ்செய்கிற ஓர்பாவியினிமித்தம் பரமண்டலத்தில் அதிக சந்தோஷம் உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும் பத்து திராக்மாஎன்னும் பணங்களையுடைய எந்த ஸ்திரீயானாலும், ஓர் திராங்மாவை இழந்தால், தீபத்தைக் கொளுத்தி வீட்டைப்பெருக்கி அதைக் கண்டெடுக்கிறவரைக்கும் சாக்கிரதையாய்த் தேடுகிறாளல்லவோ? அதைக்கண்டெடுத்தபின் தன் சிநேகிதிகளையும், அண்டைவீட்டுக்காரிகளையும் வரவழைத்து நான் போக்கடித்த திராக்மாவைக் கண்டெடுத்தபடியால் என்னோடு சந்தோஷப்படுங்கள் என்று சொல்லுவாளல்லோ? அப்படியே, தவஞ்செய்கிற ஓர் பாவியினிமித்தம் சர்வேசுரனுடைய சம்மனசுகளிடத்தில் சந்தோஷமுண்டாகுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். கிறீஸ்துவே உமக்குப் புகழ் உண்டாவதாக.

மாந்தை மாதாவே! துணைநீரே.

### நேர்த்தி விளம்பரம்

நான் பிரசவநோய்காரணமாகப் பல நாட்களாகவருந்திச் சுகிக்கமுடியாமல் மாந்தைமாதாவாம்—மடுத்திருநாயகியை அதிபக்திஉருக்கத்துடன் வேண்டிக்கொண்டேன். அப்பரிசுத்தபரமஈஸ்வரியின் உதவியால் கஷ்டமின்றிப் பிள்ளையைப் பெற்றெடுத்தேன். இன்னும் எனக்கும் எனது குடும்பத்திற்கும் பூரண சுகபலத்தை அப்பரமநாயகி அருளுவாளெனத் திடநம்பிக்கை கொண்டு இதனை விளம்பரஞ் செய்கின்றேன்.

மாந்தைமாதா மகிமைபெறுவாராக!

அந்தோனிப்பிள்ளை-மாகிறேற்
பாப்பாமோட்டை.

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

சூராவத்தை :— என்வருத்தம் சுகமாகும்படி பரிசுத்த ஊபகாரமாதாவிடமும் அர்ச். சூசையப்பரிடமும் சங். சிஸ்றர் அல்போன்சா இடமும் மன்றாடினேன். மேலும் எனது மகளின் பரீட்சையும் சித்தியாகும்படி அர்ச். சவேரியாரிடமும கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடமும் மன்றாடினேன். நான் கேட்ட மன்றாட்டுகள் கிடைத்தன. நேர்த்திப்படி ஏழைகளின் காணிக்கை அனுப்பி இதைப் பிரசுரிக்கும்படி தயவாய்க் கேட்கிறேன்

இ. றே.

செட்டிகுளம் :— கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடம் நான் கேட்ட நற்காரியம் சித்தியானபடியால் ஏழைகளின் தருமஅப்பத்துக்கு அவருக்கு நன்றியாக ரூபா 10 காணிக்கை அனுப்புகிறேன். என்றும் அவர் நாமம் புகழப்படக்கடவதாக.

B. சவிரிமுத்து

இறம்பைக்குளம் :— எனதுமகன் யேசுதாசனுக்குப் பலமாதகாலமாய் உண்டாயிருந்த வயிற்றோட்டம் பலவிதவைத்திய சிகிச்சையாலும் குணமுறாததைக் கண்டு, எங்கள் பாதுகாவலராம் அர்ச். அந்தோனியாரிடம் இரந்துமன்றாடியதின்பயனாகப் பூரணசுகங்கிடைத்தது. அவர் சர்வேசுரனிடம் பெற்றுத்தந்த உபகாரத்துக்கு நன்றியாக இதைப்பகிரங்கப்படுத்தி அவரின் ஏழைகளின் அப்பத்துக்குக்காணிக்கையாக ரூபா 2 கொடுக்கிறேன்.

ச. மரியநாயகம்

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

இல்லா: எஸ். கே. மரியாம்பிள்ளை 5-00—நாவற்காடு: அ. வஸ்தியான் 1-50—யாழ்ப்பாணம்: பி. செபஸ்தியாம்பிள்ளை 1-50—ஏழாலை: ஐ. வரப்பிரகாசம் 2-00—ஏழாலை: பி அம்புறோஸ் 1-00—மாருவில்: பிறுங் அன்ரன் 20-00—கொழும்பு: பி. எவ். செல்வநாயகம் 2-00—மஸ்கேலியா: எம். பஸ்ரியாம்பிள்ளை 4-00—முந்தல்: பி. ஏ. பிறின்றோ—1-00—அம்பிற்றியா: எம். டானியல் 2-00—அக்கரபத்தன: சி. எம். தாஸ் -90—யாழ்ப்பாணம்: ஏ. ஏ. தம்பு 1-00—பண்டாரவளை: எல். பி. அன்ரனி 7-00—ஈனுஓயா: ஏ. எஸ். செபஸ்ரியான் 5-00—யாழ்ப்பாணம்: இ. பி. இராசையா 1-00—புத்தளம்: பிறுங் எல். லீயோ 12-00—பண்டாரவளை: மிசெஸ். ஜே. எஸ். பீற்றர் 2-00—உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 25-00—வின்கல்லாய்: ஏ. ஏ. மொறுய்ஸ் 2-00—வக்கவென்றலாவ: டபிள்யு. ஏ. வில்லியம் 1-00—காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 2-00—மாத்தளை: எஸ். எவ். சீமோன் 2-00—வற்றக்கல: பி. ஆர். ஞானப்பிரகாசம் 10-00—சுண்டிக்குளி: பி. எஸ். ஆர். 1-00—மமுலசீனு: ஜே. எஸ் மாட்டீன் 2-00—பீற்றப்பிற்றற: ஏ. பிலிப்பையா 9-00—பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 1-00—இல்லா: ஏ. எல். சீமோன் 4-00—கொற்றன்னு: கே. டி. அலோஷியஸ் சில்வா 2-50—பசறை: பிலிப் அந்தோனி 1-00—நியிவட்டா: வை. ஐ. கோமஸ் 1-00—நீர்கொழும்பு: லூர்துமேரிபார்பறு -25—மாம்புரி: டி. தமியாம்பிள்ளை 2-00—அக்கரபற்றன: எல். ஏ. எஸ். தோமாஸ் 2-00—நொவட்டா: எக்ஸ். ஐ. கோமஸ் 2-00—யாழ்ப்பாணம்: பி. செபஸ்தியான் 1-50—டொன்கொற்றுவா: டபிள்யு. ஈ. பெர்ணண்டோ 3-00—கொச்சிக்கடை: கே. எம். பெர்ணண்டோபிள்ளை 3-00—அம்பிற்றியா: லூர்த்துமேரி 1-00—மஸ்கேலியா: கே. எம். அதிரியான் 3-00—வண்டுறும்ப: ஏ. எஸ். பிள்ளை 5-00—நாவற்காடு: அ. வஸ்தியாம்பிள்ளை 1-00—மாத்தளை: ரி. எவ். சைமன் 2-00—புத்தளம்: பி. ஏ. எம். 2 00—சூராவத்தை எஸ். என். மரியதாஸ் 2-00—அரிப்பு: செ. ஞானம்மா குரூஸ் 2-00—நனுஓயா: எவ். எம். பர்ணபாஸ் 2-00, ஏ. எஸ். செபஸ்ரியான் 2-00—கண்டி: பி. ஏ. மாட்டீன் 1-00—லுனுகலை: எஸ். ஏ. செபஸ்ரியம்மாள் 1-00—குருனுகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00—நமுனகல: எவ். பி. சாமுவேல் 1-00—மட்டக்களப்பு: எம். எஸ். சாமுவேல் 1-00—சொழும்பு: கே. அல்வீனு பெறேரு 1-00—கல்கமுவா: அ. மரியாம்பிள்ளை 1-00—யாழ்ப்பாணம்: அ. கிறிஸ்தோப்பர் 5-00—சூராவத்தை: இ. ரோசம்மா 2-00—சிங்கப்பூர்: அ. விக்ரோறியா 3-00—இறம்பைக்குளம்: ச. மரியநாயகம் 2-00—வவுனியா: எஸ். எம். வி. 1-00—உடப்புசலாவை: எஸ். வி. மரியரோஸ் பீற்றர் 2-00—பண்டாரவளை: எல். பி. அன்ரனி 4-00—கல்கமுவா: அ. திரேசாள் -50—செட்டிகுளம்: யோ. சந்தாம்பிள்ளை 6 00—நுவரெலி: ரி. வி. றப்பியேல் 5-00—கொச்சிக்கடை: எஸ். எம். நாடார் 5-00—கம்பளை: மிசெஸ். ஏ. டி. சேவியர் 2-00—யாழ்ப்பாணம்: பி. எஸ். திருச்செல்வம் 20-00—தலவாக்கொல்லை: ஏ. பி. சிங்கராயர் 5-00—நாவலப்பிட்டி: ஞா. சவிரியம்மாள் 1-00

| | |
|---|---|
| The Director,<br>St. Joseph's<br>Conference<br>Bishop's House<br>JAFFNA. | சென் வின்சென் டீ<br>போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன<br>மாளிகை<br>யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்மரண அறிக்கை

கொழும்பு சாப்புத்தெரு பிரிட்டோ பிரதர்ஸி (BRITTO BROS)ல் பல காலம் காஷியராய் பணியாற்றிவந்த வடக்கன்குளம் ஸ்ரீமான். மு.சூ. சூசை தேவசகாயம்பிள்ளை அவர்கள் தனது 60-வது வயதில் சகலதேவதிரவிய அனுமானங்களையும் பக்திப்பற்றுதலுடன் பெற்று 10-6-49 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குப் பரலோகப்பிராப்தியடைந்தார்கள். மறுநாள் வெகு ஆடம்பரத்துடன் இனபெந்துக்கள்சூழ மாலை 3 மணிக்கு மாதம்பிட்டிக் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத்துக்கச்செய்தியை இத்தால் தெரிவித்துக்கொள்வதோடு இவ்வாத்துமத்தைநினைவுகூர்ந்து வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

R. I. P.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேத்தி, பேரப்பிள்ளை

கொழும்பு.

### நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதயத்திடமும் பரிசுத்த பொம்பேயிமாதா, அர்ச். தீற்றம்மாள், அர்ச். பிலோமினம்மாள், அர்ச். சவேரியார் இடமும் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

### குழந்தை வளர்ப்பு விஷயத்தில் கவனிக்கவேண்டிய
## சில விஷயங்கள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் இதனுல் நரம்புப்பதட்டம் உள்ளவர்களாயும் பயங்கொள்ளிகளாகவும் கோழைகளாகவும் ஆகிவிடுகிறார்கள். அவர்கள் பயங்கொள்ளிகளாக இருந்தால் அவர்கள் முன்னிலையில்அதைப் பிறத்தியாரிடத்தில் சொல்லாதே. அவர்களிடத்திலும் அதை அடிக்கடி சொல்லிக்கொண்டிராதே.

பிள்ளைகளுக்கு ஆசாபங்கத்திலேயே, சாதாரணமாக, கோபமும் எரிச்சலும் உண்டாகும். சாதாரணமாக செல்லப் பிள்ளைகள் தாங்கள்கேட்பதெல்லாம் நியாயமானவை என்றும் அவைகளைத் தங்கள் பெற்றோர் கட்டாயம்கொடுத்தே ஆகவேண்டுமென்றும் எண்ணுவார்கள்; அப்படிக் கொடுக்காவிட்டால் அவர்கள் சிணுங்குவார்கள், அழுவார்கள், கீழேவிழுந்துபுரளுவார்கள், கைக்கு அகப்படும் பாத்திரங்களை உடைப்பார்கள், உடுப்புகளைக் கிழிப்பார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்திலே இந்தக் கோபசுபாவம் விளங்காதபடி தங்களால் ஆனமுயற்சியெல்லாம் செய்யவேண்டும். அதை அடக்குவதற்குச் சிறந்தவழி அதைஅலட்சியம்பண்ணுவதே. அவர்கள் முரண்டுபிடித்து, அல்லது மூர்க்கம்பண்ணிக்கேட்கிற ஒருகாரியத்தையும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. கோபம்ஒன்றையும் சாதிக்கமுடியாதென்று கண்டுகொண்டபிள்ளைகள் பிறகு இலேசிலே முரண்டுபிடிக்கமாட்டார்கள். நாம் அவர்களுடைய கோபத்திற்கு இணங்கக் கூடாதெனினும், அதின் உண்மைக் காரணத்தைக் கண்டறிந்து அதை நீக்கத் தேடவேண்டும்.

(நல்வழி)

## மன்னாரில் மந்திரி ஜி. ஜிக்கு வரவேற்பு

மீன்பிடி-மீன்பிடி ஆராய்ச்சி—கைத்தொழில் மந்திரி கௌரவ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் மன்னாருக்கு விஜயம்செய்யும்போது மன்னார்ப்பட்டின சங்கத்தின் சார்பாக ஓர்வரவேற்பளிக்கப்பட வேண்டுமென்று ஏலவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. 10-6-49 மாலை 6 மணிக்கு மன்னார்ப் பாலத்தடியில் பன்னூற்றுக்கணக்கான சனங்கள் குழுமிநிற்க, கௌரவமந்திரி அவர்கள் வந்திறங்கினர். பட்டினசங்கத் தலைவர் V. A. அழகக்கோன் அவர்களால் மாலைசூட்டப்பட்டது. நாகசின்ன வாத்தியங்களோடு "கிளினிக்" சாலைக் கருகாமையிலுள்ள குழந்தைகள்விளையாட்டு மைதானத்தில் அழகுற அமைக்கப்பட்டிருந்த பந்தலுக்கழைத்துச் செல்லப்பட்டார். உயர்மேடையிற் தலைவர் V. A. அழகக்கோன் அக்கிராசனம்வகிக்க வலமாகக் கௌரவ மந்திரி ஜி. ஜி. அவர்களும் ஜனுப்-கபூர் அவர்களும், இடமாக, அதிவண. பீற்றர் சுவாமியவர்களும் திரு. டானியேல் ரேச் ஆசிரியரவர்களும் அமர்ந்திருந்தனர். ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். அக்கிராசனரால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. திரு. டானியேல் ரேச்சால் மன்னார்ப்பகுதி மக்கள்சார்பாக ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின் அதிவண. பீற்றர்சுவாமியவர்களெழுந்து மக்கள் மந்திரியிற் கொண்டிருக்கும் அன்பைப் பாராட்டியும், மக்களின் தேவைகளை வார்த்தைகளாலல்லக் கிரிகைகளால் நிறைவேற்றமந்திரியார் முயலவேண்டுமென்றும், மந்திரியார்தன்கையிற்கிடைத்துள்ள அதிகாரத்தை மக்களின் நலனுக்காக எவ்வெவ்வழிகளிற் பயன்படுத்தலாமோ அவ்வவ்வழிகளிற் பயன்படுத்தி அவரைப்பல ஆண்டுகளாகப் பின்சென்ற மக்களின் நலனுக்காக உழைப்பாரென்று காத்திருப்பதாகவும் பலமெல்லாம் திரண்டபலம்—எங்கள்பலம்—பொன்னம்பலம்என்றும் கூறி வாழ்த்தினர். அதன்பின் ஜனுப்-கபூர் அவர்கள் தமிழரின் வீரம்—பெருமை என்பவைகளோடு மந்திரியாரின் திறமையையும் அவராற்றிய புகழ்நிறைந்த வீரத்தையும்கூறி வாழ்த்தினர். அதன்பின் மந்திரியாரெழுந்து பின்வருமாறு கூறினர்: "18 ஆண்டுகளுக்குமுன் நான்மன்னாருக்கு முதன்முதல் வந்ததிலிருந்து உங்களுடைய அன்பை எனக்கு அமோகமாகக் காட்டிவந்திருக்கிறீர்கள். ஏழைமக்களுக்கு உதவிசெய்யக்கூடிய மந்திரிபதவி மீன்பிடி மந்திரிபதவிதான். அதற்காகவே நான் இப்பதவியையேற்றேன். அதிகமாக்கஷ்டப்படும்மக்கள்மீன்பிடித்தொழிலாளரே. என்னால் இயன்ற அளவு உங்கள் தொழிலுக்கு உதவிசெய்வதோடு வேறுவித கைத்தொழில்களை விருத்தியாக்கவும் உதவிசெய்வேன். நிற்க வெளியில் நின்று நாங்கள் சிங்கள மந்திரிசபையைக் குறைகூறுவதிலும் அதில்சேர்ந்து எங்களுக்குக் கிடைக்கும் அளவுகளைக்கொண்டு மட்டிட்டபின்தான் நன்மை தின்மையை அறியலாம். நீங்கள் இப்போது மந்திரியென்று என்னைஏதோஒருவித்தியாசமாய் விளங்கிக்கொண்டீர்கள்போல் தெரிகிறது. அப்படி ஒன்றுமில்லை. 18 ஆண்டுகளுக்குமுன் உங்கள் மத்தியிற் தோன்றிய அதே பொன்னம்பலந்தான் நான். அந்தப் பொன்னம்பலத்துக்கும் எனக்கும் ஒருவித்தியாசமுமில்லை. ஆனால் இப்போது வயது போய்விட்டது மாத்திரம் வித்தியாசம். எனதுகந்தோரில் எந்த ஏழைகளோ—குழந்தைகள்தானும்—என்னைக் காண விரும்பினால் அவர்களுக்காக 9—10 மணிமட்டும் தருணம் ஒதுக்கிவைத்திருக்கிறேன்.' பின்பு தமக்குச் செய்யப்பட்ட உபசாரணைக்கு நன்றி கூறி முடித்தார்.

பின் திரு. டானியல் ரேச் சமூகமளித்தவர்களுக்கு வாழ்த்துக்கூறவெழுந்து: மீன்பிடித்தொழிலின் விர்த்திக்காக ஐரோப்பாவிலிருந்து நிபுணர்களை அழைப்பதெல்லாம் நல்லதுதான், எனினும் மன்னார்ப்பகுதியிலுள்ள கடலையும்—அதன் நிலையையும் அதிலுள்ள மீன்களையும் எவ்வெக் காலங்களில் எவ்வெவ் முறையாகப் பயன்படுத்தலாமென்றும் தலைமுறை தலைமுறையாகத் தொழில்செய்யும் மன்னார் மீன்பிடித்தொழிலாளருக்கும் போதியளவு தெரியுமென்றும் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது மிக மேலானதென்றும் இப்பகுதியிலுள்ள மீன்பிடித் தொழில் புரியும் ஒவ்வோர்ஊரிலுமிருந்து 5 அல்லது 2 பேரைத் தெரிந்தெடுத்த மன்னார்ப்பகுதி மீன்பிடிச் சங்கம் ஒன்றை உண்டாக்கி அதிலிருந்து சிலரைக் கொண்ட நிர்வாகசபையாக்கி அதில் தெரியப்பட்ட இருவர் அல்லது மூவர் கொழும்பில் கூடும் மத்தியசங்கத்திற் கலந்திருப்பதினால் இப்பகுதிகளிலுள்ள குறைகளைத் தலைமைஇடத்தில் தெளிவாக எடுத்துக்காட்டவும் தலைமை இடத்தால் கொடுக்கப்படும் புத்திமதி, உதவிகளைச் சகலரும் அறிந்து அனுபவிக்கவும் உதவியாயிருக்குமென்றும் குறிப்பிட்டார்.

உடனே மந்திரியாரெழுந்து இது நல்ல யோசனை என்றும் இதுபற்றித் தாம் போதிய கவனமெடுப்பதாகவும் கூறினர். பின் வாழ்த்துரையோடு வரவேற்பு முடிபுற்றது.

அன்று இரவு 8 மணிமட்டில் மந்திரியார் பனங்கட்டிக்கொட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு அழகுறச் சோடிக்கப்பட்ட பந்தரில் அதிவண. பீற்றர் சுவாமியாரின் அக்கிராசனத்தில் தம்பிப்பிள்ளை என்பவரால் ஓர் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அவர்களின்கஷ்டங்களை மந்திரியார் விசாரித்ததோடு கஷ்டப்படும் ஏழைமக்களுக்கு உதவிபுரிவதுதான் தனது ஆசை என்றும் மீன்பிடி இலாகா சரியாகவேலை செய்யவேண்டும்; அன்றேல், தான் இப்பதவியைவிட்டுவிலகவேண்டிவருமென்றும், அல்லது அதற்குரிய உத்தியோகஸ்தர் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றுங் கூறினர்.

அடுத்தநாள் (11-6-49ல்) காலை திருக்கேதீஸ்சுரம் போய், முருங்கன் பக்கம்போய்வந்தார். அவ்வவ்விடங்களில் பரிமளிப்பான வரவேற்புகள் நிகழ்ந்தன. பகல் 11மணிக்குத் தாழ்வுபாட்டுக்கு வந்தபோது அழகுறச் சோடித்திருந்த பாடசாலையில் அழைத்துவந்துவரவேற்பளிக்கப்பட்டார். அதிவண. பீற்றர்சுவாமியாரின் அக்கிராசனத்தில் அவ்வூர்ச் சனங்கள் எல்லோரும் கூடியிருந்தனர். பாமாலையும், பூமாலையும் அணிவித்து அவ்வூர் விதானையாரால் ஓர்வாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. மந்திரியார் சனங்களின் குறைகளைவிசாரித்துத்தன்னாலான உதவிபுரிவதாகக் கூறிநின்றார். சிலர் பேசியபின் போஜியா லெம்பேட் ஆசிரியரால் எல்லோருக்கும் வாழ்த்துக் கூறியதோடு கூட்டம் முடிந்தது.

அன்று பகல் 1 மணியளவில் மந்திரியாருக்கு பள்ளிமுனையில் உற்சாகமாக வரவேற்பளிக்கப்பட்டது. மந்திரியாரின்வரவைச்சனங்கள்எதிர்பார்த்திருக்க மந்திரியார் காரில் வந்திறங்கினர். நாதசுர வாத்தியமொலிக்கப் பலநிறக்கொடிகளாற் அலங்கரிக்கப்பட்டதெருவூடே சென்று அழகுறச் சிங்காரிக்கப்பட்ட பாடசாலையின் உயராசனத்தில் நடுநாயகமாக மந்திரியாரும்வலமாக வண. பொமிக்கல் சுவாமியாரும் இடமாக அதிகாரமும் டானியல் ரேச்சும் அமர்ந்தபின் A. M. ரேச் அவர்களால் உபசாரப் பத்திரம்படித்துக்கொடுக்கப்பட்டது. டானியேல் ரேச் அவர்கள் எழுந்து அன்பின்வளர்ச்சி—அவ்வூரின் தேவைகள்—மந்திரியாரின் இப்போதைய கடமைகள் என்பனவற்றைப்பற்றிக் குறிப்பிட்டார். மந்திரியாரெழுந்து தன்னால் இயன்றஉதவிகள் புரிவதாகவும்—தமக்குக்காட்டிவரும்அன்புக்காகநன்றி கூறுவதாகவும் தெரிவித்தார். கூட்டம் முடிந்து கடற்கரை ஓரமாக மந்திரியார் சென்று அங்கே கடற்தொழிலுக்குப் பாவிக்கப்படும் பலவிதமான வலைகளையும் பார்வையிட்டபின் விடைபெற்றுக்கொண்டு மன்னார் வாடிவீட்டுக்குச் சென்றார். மந்திரியார் அன்று பிற்பகல் பேசாலை, தலைமன்னார் முதலிய இடங்களைத் தரிசித்தார். அடுத்தநாள் உப்பளத்தைப்பார்வையிட்டபின் வங்காலை, எருக்கலம்பிட்டி என்ற இடங்கட்குச் சென்றார். அன்றுபிற்பகல் கொழும்பு நோக்கிப் புறப்பட்டார்.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கிலுள்ள பின்னுற குறிக்கப்படும் வேலைகளைச் செய்வதற்கு வடமாகாண ஏஜண்டவர்கள் 1949-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ந்திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

(1) வடமராட்சிப் பகுதி துன்னாலை வடக்கிலுள்ள துன்னாலைவாய்க்கால்திருத்துவதற்கும் இரண்டு கொங்கிறீற் அணைகட்டுவதற்கும்.

(2) பூநகரி-துணுக்காய்ப் பகுதி செட்டியா குறிச்சியிலுள்ள திகிரிக்குள வாய்க்கால் திருத்துவதும் அவ்வாய்க்கால் கட்டுப்பெலப்படுத்துவதும் ஓர் கொங்கிறீற் அணைகட்டுவதும்

(3) பூநகரி-துணுக்காய்ப் பகுதி கிராஞ்சியிலுள்ள கிராஞ்சி வாய்க்காலுக்குக் கூடுதலான திருத்தம் செய்வது.

(4) வலிகாமம் மேற்குப்பகுதி புன்னாலைக் குளத்தினால் நீர்ப்பாய்ச்சப்படும் புன்னாலைப்பக்க வயல்களுக்கு, நீர்ப்பாய்ச்ச, நாலு கொங்கிறீற் துலைகள் கட்டுவது.

(5) வலிகாமம் மேற்குப்பகுதி புன்னாலைக்குளத்தினால் நீர்ப்பாய்ச்சப்படும் தொல்புரப்பக்கவயல்களுக்கு நீர்ப்பாய்ச்ச ஐந்து கொங்கிறீற் துலைகள்கட்டுதல்.

(6) வலிகாமம் மேற்குப்பகுதி புன்னாலைக்குளத்தினால் நீர்ப்பாய்ச்சப்படும், மூளாய்ப்பக்க வயல்களுக்கு நீர்ப்பாய்ச்ச 5 கொங்கிறீற் துலைகள் கட்டுதல்.

(7) வலிகாமம் மேற்குப் பகுதி சங்குவேலியிலுள்ள கேலங்காமம் குளத்தில் இரண்டு கொங்கிறீற் துலைகள் கட்டுவதும், கேலங்காம வாய்க்கால் திருத்துவதும்.

(8) தென்மராட்சிப்பகுதி கச்சாயிலுள்ள வண்ணான் குளவாய்க்கால் திருத்துவதும் ஓர் கொங்கிறீற் அணைகட்டுவதும்.

(9) தென்மராட்சிப் பகுதி மீசாலை தெற்கிலுள்ள அடம்பிக்குள வாய்க்கால் திருத்துவதும் ஓர் கொங்கிறீற் அணைகட்டுவதும்.

மேற்சொன்ன ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு விண்ணப்பம் செய்யவேண்டும். குறித்த விண்ணப்பப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா (25/-) இருபத்தைந்து கச்சேரியிற்கட்டி வடமாகாண ஏஜண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொருபத்திரமாக 1949-ம் ஆண்டு ஜூலைமாதம் 2-ந்தேதி சனிக்கிழமை பகல் 12 மணிவரைக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும். மறுவிபரங்களை வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொள்ளவும்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street Jaffna, on Thursday, June 23 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org